விலை: ரூபா 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 01 | சுக்கில ஹூ பங்குனி மீ 13-ம் உ | திங்கட்கிழமை | (26 - 03 - 1990) | ஹிஜ்ரி 1410 | ஷஃபா 28 | ஓசை 36

கடந்த சில ஆண்டுகளுக்கு

## அடகு நகைகளுக்கு வட்டி விலக்களிக்கவும்

(யாழ்ப்பாணம்)

வங்கியில் நகைகளை அடகுவைத்து கடந்தகால சம்பவங்களினால் நகைகளை மீட்க முடியாமலும் வட்டி கட்ட முடியாமலும் உள்ள எளிய மக்களுக்கு வட்டியிலிருந்து விலக்களிக்க வேண்டுமென்று விடுதலைப் புலிகள மக்கள் முன்னணி அரசாங்கத்தைக் கேட்டுள்ளது. அரசும் இதனைப் பரிசீலனை செய்வதாக உறுதியளித்திருக்கிறது.

நகைகளை வங்கிகளில் அடகுவைத்தவர்கள் அவற்றை மீட்கக்கூடிய சூழ்நிலையோ வட்டி செலுத்தக்கூடிய நிலையோ நாட்டில் கடந்த சில வருடங்களாக நிலவவில்லை. சாப்பாட்டுக்குக் கூடப் பெரும் கஷ்டப்படவேண்டிய நிலையிலும் பலர் இருந்திருக்கிறார்கள் இந் நிலையில் அவர்கள் (6ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியப் படை வெளியேற்றம்

# ஏப்ரல் 19 எழுச்சி நாள்;

## தமிழீழத்தில் கொண்டாட்டம்

(யாழ்ப்பாணம்)

**இந்தியப் படை தமிழீழ மண்ணிலிருந்து வெளியேறியதைக் கொண்டாடும் முகமாக அடுத்த மாதம் பத்தொன்பதாம் திகதி தமிழீழம் எங்கும் எழுச்சி நாள் விழாவாக நடத்த தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் தீர்மானித்துள்ளனர்.**

இந்தியப்படை இலங்கை மண்ணிலிருந்து முற்றாக வெளியேறியதைத் தென்னிலங்கையில் பூஜை பிரார்த்தனைகள் மூலம் கொண்டாடப்படும் அதே சமயம் இந்தியப்படையை எதிர்த்துப்போராடி வெற்றி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள், அன்னை பூபதி உண்ணா விரதமிருந்து உயிர்த்தியாகம் செய்த ஏப்ரல் பத்தொன்பதாந் தேதியன்று தமிழீழமெங்கும் பேரணிகள் பொதுக்கூட்டங்கள் வைத்து பெரும் எழுச்சி நாள் விழாவாக கொண்டாடுவதற்குத் தீர்மானித்துள்ளனர்.

இத் தகவலை தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் திரு. யோகரத்தினம் யோகி நேற்று 'ஈழநாதம்' பிரதிநிதிக்குத் தெரிவித்தார்.

## கொழும்பில் 7 தமிழ் இளைஞர் கைது

(கொழும்பு)

கொழும்பு நகரில் நேற்று முன்தினம் கொட்டாஞ்சேனை கொம்பனித்தெருப் பகுதிகளில் பொலிசார் நடாத்திய திடீர் தேடுதல் வேட்டையில் ஏழு தமிழ் வாலிபர்கள் ஆயுதங்களுடன் கைது செய்யப் (6 ஆம் பக்கம் பார்க்க)

## பார்சலில் இருந்த குண்டு வெடித்ததால் ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவுக் கடற்கரையில் கரையொதுங்கிய பார்சலைப் பிரித்துப் பார்த்தவர் குண்டுவெடித்துக் காயமடைந்தார்.

முல்லைத்தீவு கள்ளக்கேணி என்ற இடத்தில் இராசையா பூபாலசிங்கம் என்ற 20 வயது வாலிபரே மேற்படி சம்பவத்தில் காயமடைந்தவராவார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## வி.பி. சிங் அரசுமீது இலங்கை நம்பிக்கை

ஜனாதிபதி பிரேமதாஸா அறிவிப்பு

(கொழும்பு)

'திரு. வி.பி. சிங் தலைமையிலான இந்தியாவின் புதிய அரசாங்கத்தில் இலங்கையரசு நம்பிக்கை வைத்துள்ளது'' என்று ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா நேற்று அட்டன் நகரில் நடைபெற்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொன்விழாக் கொண்டாட்டத்தில் பிரதம விருந்தினரா (6ஆம் பக்கம் பார்க்க)

## நாடு திரும்பிய இராணுவத்திற்கு சென்னையில் வரவேற்பு

(புதுடில்லி)

இலங்கையில் கடந்த இரண்டரை ஆண்டுகளாக அமைதிப் பணியாற்றி, திருக்கோணமலையிலிருந்து நேற்று மாலை இந்தியா சென்றடைந்த அமைதிப் படைக்கு, சென்னையில் அன்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இலங்கையின் திருக்கோணமலையிலிருந்து வந்த இந்தியாவின் கடைசி அமைதிப் படை அணியினை சென்னைத் துறைமுகத்தில் வைத்து பாதுகாப்பு இணையமைச்சர் திரு. இராஜாராமண்ணா தமிழக ஆளுனர் டாக்டர் பி. சி. அலெக்சாண்டர் ஆகியோர் வரவேற்றனர், மற்றும் தென்பிராந்திய இராணுவத் தலைமைத்தளபதி லெப்டினன் ஜெனரல் ஏ கே. சட்டர்ஜி, கிழக்குக் கடற்படைத் தளபதி தென்பிராந்திய விமானப்படைத் தளபதி ஆகியோர் அமைதிப் படையின் கடைசி அணியினரை வரவேற்றார்கள்.

## சிறுபான்மையினருக்கு உரிமை வழங்காவிடில் நாடு பிரியும்

-ஜனாதிபதி

(கொழும்பு)

நாட்டில் வாழும் எழுபத்தைந்து வீதமான பௌத்தர்கள் இருபத்தைந்து வீதமான சிறுபான்மை இன மக்களின் உரிமைகளை வழங்கத் தவறுமிடத்து நாடு பிரிவதைத் தவி (6ஆம் பக்கம் பார்க்க)

## தமது குடும்பத்தைவிட மண்ணை நேசித்தவர் அன்னை பூபதி!

(வவுனியா)

''அன்னை பூபதி தன் குழந்தைகள், தன் கணவருக்கு மேலாக மண்ணை நேசித்துள்ளார். இந்தியப் படை, இலங்கைப் படை. தேசத் துரோகக் கும்பல்கள் ஆகியோரின் அட்டூழியங்களுக்கு மத்தியில் அகிம்சையில் நம்பிக்கை வைத்து உண்ணா விரதத்தை மேற்கொண்டார்'.:

மேற்கண்டவாறு வவுனியா மாவட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் திரு. தினேஷ் தெரிவித்தார்.

சனிக்கிழமை (24. 03. 90) வவுனியா மகளிர் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற அன்னை பூபதியின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது.

தமிழ்மக்களின் நலனுக்காக இந்தியப்படை வந்திருந்தால், நிச்சயம் அன்னையின்

## உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடாத்த நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு கிழக்கு உட்படநாடு முழுவதும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை நடாத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி நகரசபைகள், மாநகரசபைகள், கிராமசபைகள் பிரதேச சபைகள் என்பவற்றின் தேர்தல்கள் நடைபெறுவதற்கு தேர்தல் ஆணை சட்ட விதிகளுக்கான நகல் சட்ட மூலம் வர்த்தமானி மூலம் வெளிபிடப்பட்டுள்ளது.

இந்தச் சட்ட மூலம் எதிர் வரும் ஏப்ரல் மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

நாட்டில் தற்போது நிலமை வழமைக்குத் திரும்பிக்கொண்டுவருவதால் இவற்றை நடாத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

## நினைவுத் தூபி திறப்பும்

## 120 போத்தல் வடிசாரயம் பெண்களிடம் பறிமுதல்!

(விசேட நிருபர்)

போத்தல் வடிசாராயத்தைக்

## இந்திய கடற்படை அதிகாரி

மண்ணிலிருந்து முற்றாக வெளியேறியதைத் தென்னிலங்கையில் பூஜை பிரார்த்தனைகள் மூலம் கொண்டாடப்படும் அதே சமயம் இந்திராடி வெற்றி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள், அன்னை பூபதி உண்ணா விரதமிருந்து உயிர்த்தியாகம் செய்த ஏப்ரல் பத்தொன்பதாந் தேதியன்று பொதுக்கூட்டங்கள் வைத்து பெரும் எழுச்சி நாள் விழாவாக கொண்டாடுவதற்குத் தீர்மானித்துள்ளனர்.

இத் தகவலை தமிழீழ விடு

இலங்கையில் கடந்த இரண்டரை ஆண்டுகளாக அமைதிப் பணியாற்றி, திருக்கோணமலையிலிருந்து நேற்று மாலை இந்தியா சென்றடைந்த அமைதிப் படைக்கு, சென்னையில் அன்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இலங்கையி திருக்கோணமலையிலிருந்து வந்த இந்தியாவின் கடைசி அமைதிப் படை அணியினை சென்னைத் துறைமுகத்தில் வைத்து பாதுகாப்பு இணையமைச்சர் திரு. இராஜாராமண்ணா தமிழக ஆளுனர் டாக்டர் பி. சி. அலெக்சாண்டர் ஆகியோர் வரவேற்றனர், மற்றும் தென்பிராந்திய இராணு

டர்ஜி, கிழக்குக் கடற்படைத் தளபதி தெ. பிராந்திய விமானப்படைத் தளபதி ஆகியோர் அமைதிப் படையின் கடைசி அணியினரை வரவேற்றார்கள்.

## வழங்காவிடில் நாடு பிரியும்

-ஜனாதிபதி

(கொழும்பு)

நாட்டில் வாழும் எழுபத்தைந்து வீதமான பௌத்தர்கள் இருபத்தைந்து வீதமான சிறுபான்மை இன மக்களின் உரிமைகளை வழங்கத் தவறுமிடத்து நாடு பிரிவதைத் தவி

(6 ஆம் பக்கம் பார்க்க)

# தமது குடும்பத்தைவிட மண்ணை நேசித்தவர் அன்னை பூபதி!

(வவுனியா)

''அன்னை பூபதி தன் குழந்தைகள், தன் கணவருக்கு மேலாக மண்ணை நேசித்துள்ளார். இந்தியப் படை, இலங்கைப் படை. தேசத் துரோகக் குர்பல்கள் ஆகியோரின் அட்டூழியங்களுக்கு மத்தியில் அகிம்சையில் நம்பிக்கை வைத்து உண்ணா விரதத்தை மேற்கொண்டார்'.:

மேற்கண்டவாறு வவுனியா மாவட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் திரு. தினேஷ் தெரிவித்தார்.

சனிக்கிழமை (24. 03. 90) வவுனியா மகளிர் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற அன்னை பூபதியின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது.

தமிழ்மக்களின் நலனுக்காக இந்தியப்படை வந்திருந்தால், நிச்சயம் அன்னையின் போராட்டத்தை அது மதித்திருக்கும். ஆனால் இந்தியப் படை இந்தியாவின் சொந்த நலனுக்காக வந்த காரணத்தினாலேயே நாம் அன்னையை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்தியப் படையின் தாக்குதல்களினால் ஆறாயிரம் மக்கள் தம் உயிரை இழந்துள்ளனர். ஆயிரத்திற்கும் அதிக

(6ஆம் பக்கம் பார்க்க)

## நினைவுத் தூபி திறப்பும் பொதுக் கூட்டமும்

(யாழ்ப்பாணம்)

தமிழீழத்திற்கானபோராட்டத்தில் இறந்த அனைத்து விடுதலைப் புலிகளின் நினைவாகவும் ஒட்டுசுட்டானில் நினைவுத்தூபி ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

இத்தூபி எதிர்வரும் புதன்கிழமை திறந்து வைக்கப்பட்ட உள்ளது. இது தொடர்பாக நடைபெறவுள்ள பொதுக்கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் சோ. பசேந்திரராசா, செயலாளர் யோகரட்ணம்(யோகி) கவிஞர்காசிஆனந்தன் உட்பட வன்னி மாவட்டப் பொறுப்பாளர்களும் கலந்து கொள்வார்கள் எனத் தெரிய வருகின்றது

## 120 போத்தல் வடிசாரயம் பெண்களிடம் பறிமுதல்!

(விசேட நிருபர்)

நேற்று பகல் 11-மணியளவில் யாழ் - ஹரன் தியேட்டர் ஒழுங்கையில் இரு பெண்களிடம் இருந்து 120, போத்தல் வடிசாராயம் பிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப் படுகிறது.

அப்பகுதியில் பல பெண்கள் சட்ட விரோதமாக வடிசாராயம் விற்பதாகக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து போதைப் பொருள் ஒழிப்புச் சங்கத்தின் முலவை அருள் மாத சனசமூக நிலைய ஐந்தாவது இளையில் இருந்து சென்றவர்கள் மேற்படி சோதனையை நடத்தி 120, போத்தல் வடிசாராயத்தைக் கைப்பற்றியதாக அறிவிக்கப் படுகிறது.

யாழ். நகரப் பகுதியில்50, பெண்கள் சட்டவிரோதமாக வடிசாராய விற்பனையில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிய வந்துள்ளது. (21)

## உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடாத்த நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு கிழக்கு உட்படநாடு முழுவதும் உள்ளஉள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை நடாத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி நகரசபைகள். மாநகரசபைகள், கிராமசபைகள் பிரதேச சபைகள் என்பவற்றின் தேர்தல்கள் நடைபெறுவதற்கு தேர்தல் ஆணை சட்ட விதிகளுக்கான நகல் சட்ட மூலம் வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தச் சட்ட மூலம் எதிர் வரும் ஏப்ரல் மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

நாட்டில் தற்போது நிலமை வழமைக்குத் திருப்பிக்கொண்டுவருவதால் இவற்றை நடாத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

## இந்திய கடற்படை அதிகாரி இலங்கை அதிகாரிக்கு அன்பளிப்பு

திருக்கோணமலையிலிருந்து இந்தியஅமைதிப்படை நேற்று முந்தினம் விலகிய சமயம், விசாகப்பட்டணம் கப்பற்படைத் தளபதி இலங்கை கப்

(6ஆம் பக்கம் பார்க்க)

# மாகாண அமைச்சுகளுக்கு புதியதற்காலிக செயலர்கள்

## தேர்தலின் பின் நிரந்தரமாக்குவது பற்றி யோசிக்கலாம் - ஆளுநர் நளின்

(திருக்கோணமலை)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தெரிவு செய்யப்பட்ட புதிய பதில் செயலாளர்களின் பதவிகள் தற்காலிகமானவை என்றும். வடக்கு - கிழக்கு மாகாண சபைத் தேர்தல்கள் முடிந்த பிறகு இந்தப் பதவிக்குப் புதிய நியமனங்கள் பற்றிப் பரிசீலிக்கப்படும் என்று வடக்கு - கிழக்கு ஆளுநர் நளின் செனிவரெட்னா எமது விசேட நிருபருக்குத் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாண சபை முன்னாள் அமைச்சுகளின் செயலாளர்கள் பதவிக்குச் சமூகமளிக்கத் தவறிவிட்டனரெனவும், மாகாண சபையின் நிர்வாகத்தை இயங்க வைக்கும் வகையில் யாப்பின் 32ஆவது ஷரத்தில் தனக்கு வழங்கப்பட்டுள்ள சட்டபூர்வமான அதிகாரத்தைப் பாவித்து, தான் தற்காலிகமாகப் பதில் செயலாளர்களை நியமித்துள்ளதாகவும் நளின் செனிவரத்தினா மேலும் தெரிவித்தார்.

கடந்த 17ஆம் திகதியன்று ஆளுநரின் செயலகத்தில் நடந்த மகாநாடு ஒன்றின் பிறகே புதிய தற்காலிக பிரதிச் செயலாளர்கள் நியமிக்கப்பட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்

(6ஆம் பக்கம் பார்க்க)

## வட - கிழக்கு மாகாண சபை செயலாளராகக் கணேஷ்!

வடக்கு, கிழக்கு மாகாண சபை பிரதம செயலாளர் திரு வே. ந. சிவராசாவை அகற்றி. அவருக்குப் பதிலாக சொர்ணலிங்கம்கணேசதாசன் பிரதம செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான கட்டளையை ஜனாதிபதி ஆர் பிரேமதாஸா நேற்றுப் பிறப்பித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை 1987ஆம் ஆண்டு மாகாண சபைகள் 42 ஆவது இலக்க 32 ஆவதுஷரத்தின் கீழ், வடக்கு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் தமக்கு வழங்கப்பட்டுள்ள

(6ஆம் பக்கம் பார்க்க)

## ட்ரக்ரர் கவிழ்ந்து சாரதி காயம்

(வவுனியா)

சூடுமிதித்துக்கொண்டிருந்தபோது, ட்ராக்டர் குடைசாய்ந்து சாரதி பலத்த காயங்களுக்குள்ளானார்.

சிவதாசன் (வயது 40) என்பவரே காயங்களுக்குள்ளானவராவார்.

கவலைக்கிடமான நிலையில் இவர் அனுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (தி)

## மன்சூர் மீண்டும் கேட்கிறார்

(திருக்கோணமலை)

வடக்கு கிழக்கு மாகாண சபை முந்நாள் அமைச்சுகளின் செயலர்கள் வேலைக்குச் சமூகமளிக்காததைத் தொடர்ந்து ஏற்பட்டவெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன இந்த வெற்றிடங்கள் நிரப்பப்பட்டபின்னர் தான் கடமைக்குச்சமூகமளிக்க முடியுமா என்று கல்தமூலம் முன்னாள் கல்வி அமைச்சின் செயலாளர் எம். எம். மன்சூர் வடக்கு கிழக்கு மாகாண ஆளுநரைக் கேட்டுள்ளாராம்.

## அடுத்த கட்டப் பேச்சுவார்த்தை ஏப்ரல் முதல் வாரத்தில்

### இந்தியஇராணுவம்வெளியேறியபின் நிகழும் முதற் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசிற்கும் இடையிலான அடுத்த கட்டப் பேச்சுவார்த்தை அடுத்த மாதத்தின் முற்பகுதியில் நடைபெறலாம் எனத் தெரிய வருகின்றது. இப் பேச்சுவார்த்தை கடந்த காலப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் இருந்து வேறுபட்ட அம்சங்களைக் கொண்டதாக இருக்கும் என அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

இதுவரை காலமும் பேச்சுவார்த்தையின் பிரதான அம்சமாக இந்திய இராணுவ நடவடிக்கைகளும், அவற்றின் வெளியேற்றமுமே முக்கியம் பெற்றிருந்தது. ஆனால் அடுத்த கட்டப் பேச்சுவார்த்தை இந்திய இராணுவம் முற்றாக வெளியேறிய நிலையில் நடைபெறப்போவதாகும்.

இப்பேச்சுவார்த்தையில்பிரதான அம்சங்களாக வடக்கு கிழக்கு மாகாணசபை கலைப்பு, தேர்தல் என்பன முக்கிய அம்சங்களாகப் பேசப்படலாம் எனத் தெரியவருகின்றது.

இப் பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் யோகரெட்ணம் (யோகி) ஆகியோர் பங்குபற்றுவார்கள் எனவும் தெரியவருகின்றது. சில வேளைகளில் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசாவும் (மாத்தயா) பங்குபற்றலாம் எனத் தெரியவருகின்றது.

(6ஆம் பக்கம் பார்க்க)

## 'அந்நியப்படை இங்கு வந்தது ஏன்?'

### ஜனாதிபதி விளக்கம்

(கொழும்பு)

தமிழ், முஸ்லிம்கள், பறங்கியர் போன்ற சிறுபான்மையினரின் உரிமைகளைப் புரிந்து நாம் வழங்கத்தவறியதால் தான் அந்நியநாட்டு இராணுவம் இங்கு வந்தது. இவர்களின் தாய்நாடு இலங்கையே. நாட்டைமுன்னேற்றஒற்றுமையாக நாம் பாடுபடவேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதி ஆர். பிரேமதாசா நேற்றுமுன்தினம் கொழும்பிலிடம் பெற்றவைபவம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

உண்மையில் இந்தியாதேசப்பற்று என்ற போர்வையில் தனது படைகளை இங்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். வைத்தியசாலை மோட்டார்கள் களவு

(யாழ்ப்பாணம்)

யாழ் வைத்தியசாலை மலசலக் கூட கழிவு அகற்றும் பம்புகளை இயக்கும் இரண்டு அதிசக்தி வாய்ந்த மோட்டார்களும் களவாடப்பட்டுள்ளது.

(6ஆம் பக்கம் பார்க்க)

★★★★★★★★★★★★★

**வரிவிளம்பரம்**

★★★★★★★★★★★★★

**விற்பனைக்கு**

சீயாக்காய், பயறு, அரிசி, வெந்தயம் ஆகிய நான்குஇயற்கை பொருட்கள் அடங்கிய ''சீயாக்காய் பவுடர் எங்களிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். **M.G.M, No 777 K.K.S. Road, Jaffna.** (B 64)

யப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட M. D. 50 C. D. 50 சாளி சுசிக்கி 125 யமகா Mate 50 ஆகிய மோட்டார் சயிக்கில் களும் எம்மிடம் விற்பனைக்குண்டு.
**OUR LADY STORES**
**601, Hospital Road, Jaffna.**
B/407

**சேவை**

RAJZ BRAND எவசில்வர் பாத்திரங்கள் எங்கும் கிடைக்கும், உங்கள் விருப்பமே எங்கள் சேவை! பற்பல டிசைன்களில் பற்பல ரகங்கள்! சாப்பாட்டுப் பீங்கான்கள் செற் சட்டிகள், தாச்சிச் சட்டிகள், றேகள், சோஸ்பான்கள். பொரியல் சட்டிகள், டின்னர் செற்கள், ரீசெற்கள் கோவிற் சாமான்கள் இன்னும் பற்பல நம்பிக்கை நிதானம் RAJZ BRAND, பார்வை அறை S. A. தேவதாசன், சூராவத்தை, சுன்னாகம். (B-270)

**விற்பனையாகிறது**

வரலாறு ஆண்டு 6, வரலாறு ஆண்டு 7, 1990 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பாடத்திட்டத்தை தழுவி எழுதப்பட்டது. ஆக்கம், ஆலோசனை: எம். எஸ். அப்துல்ரஹீம், தி. கமலநாதன்

**தொழில் பங்காளர் தேவை**

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் 45 வருடமாக இயங்கும் ஹாட்வெயர் (இரும்புப் பொருட்கள்) ஸ்தாபனத்திற்கு முதலீட்டுடன் முழுநேர பங்காளர் தேவை விபரங்களுடன் எழுத்து மூலம் தொடர்பு கொள்ளவும்.
விளம்பர இல: 002
C/o· ஈழநாதம். 31 வைமன் வீதி, யாழ்ப்பாணம். (B/149)

**தேவை**

சீமெண்ற் வெற்று பைகள்


# ஐக்கிய நாணய சங்கங்களால் மக்களுக்கு நன்மைகள் உண்டு

## முன்னாள் கூட்டுறவு உதவி ஆணையாளர் சொல்கிறார்

(கொழும்புத்துறை)

''சாதாரண கிராம மக்கள் வங்கிகளில் கடன்பெற முடியாத நிலையில் இருந்த காலத்தில் ஐக்கிய நாணய சங்கங்கள் அவர்களுக்குக் கடனுதவி வழங்கியது. யாழ். மாவட்டத்தில் சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கத்தில் ஆரம்பத்தில் பத்து ரூபாவாகச் சேமிப்பிலிட்ட பணம் 1989 ஆம் ஆண்டு 55 இலட்சம் ரூபாவாக உயர்ந்துள்ளது. இதனால் நாமே நேரடியாகக் கடனுதவிகளை வழங்க ஆரம்பித்துள்ளோம்.''

இவ்வாறு யாழ். மாவட்ட சிக்கன கடனுதவிக் கூட்டுறவு சங்கங்களின் சமாசத் தலைவரும், முன்னாள் கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளருமான திரு. எஸ். ஞானப்பிரகாசம், சாவகச்சேரி ஏற்றுமதி உற்பத்திக் கிராம மக்கள் கம்பனியில் ஊழியர்களைக் கொண்ட சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கக் கிளையை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

இவ் அங்குரார்ப்பணக் கூட்டம் பனை அபிவிருத்திச் சபை உள்ளக கணக்காய்வாளர் திரு. எஸ். ஜெ. ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்றது.

திரு. எஸ். ஞானப்பிரகாசம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

கூட்டுறவு அமைப்புத் தோன்றிய ஆரம்ப காலத்தில் கூட்டுறவுச் சங்கங்களில் ஊழல்கள் இருக்கத்தான் செய்தன. இத்தகைய ஊழல்களைக் களையவே பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டன. ஆனால் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் முழு நோக்கத்தையும் நிறைவேற்ற முடியுமென்று சொல்ல முடியாது. ஐக்கிய நாணய சங்கங்கள் பழமை வாய்ந்தன.

சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கங்கள் யாழ். மாவட்டத்தில் சில முதலீட்டுச் சேமிப்பு ஆரம்பிக்கப்பட்டன. ஆரம்பத்தில் 54 சங்கங்கள் அமைக்கப்பட்டன. அப்போது 300 பெண்கள் உட்பட 2300 பேர் அங்கம் வகித்தனர். தற்போது யாழ். மாவட்டத்தில் 410 சங்கங்கள் இயங்குகின்றன. இச்சங்கங்கள் 21,000 பேரை அங்கத்தவர்களாகக் கொண்டுள்ளன. இவர்களில் 15,000 பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கிராமம் தோறும் இச்சங்கக் கிளைகளைத் திறந்து வருகின்றோம். இக்கிளைகள் சிறு வங்கிகளாக மாறுகின்றன. இவ்வங்கிகளை அங்கத்தவர்களே நடத்தலாம். ஒருவர் பத்தாயிரம் ரூபா வரை கடன் உதவி பெறக்கூடியதாக உள்ளது. இதனால் கிராமிய தொழில் முயற்சிகளை மேற்கொண்டு வேலை வாய்ப்புக்களையும் உருவாக்க முடியும். யாழ். மாவட்ட சமாசம் பத்து வீதமான கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இதில் வறிய மக்கள் கடன் திட்டம் முதன்மையானதாகும்.

யாழ். மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச வெளிக்கள அலுவலர் செல்வி எஸ். கலாறஞ்சினி, பனை அபிவிருத்திச் சபை உதவி உற்பத்தி உத்தியோகத்தர் திரு. கே. வைரமுத்து, சாவகச்சேரி ஏற்றுமதிக் கிராம நிறுவன முகாமையாளர் திருமதி து. இராஜேஸ்வரி ஆகியோரும் சமுகமளித்திருந்தனர்.

திரு. வ. திரவியநாயகம் நன்றியுரை கூறினார்.

# மீண்டும் திறக்கப்பட்டது

(ஈச்சமோட்டை)

நாட்டின் நிலைமை காரணமாக இயங்காமல் இருந்த கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையம் இப்பொழுது திறக்கப்பட்டுள்ளது. நாட்டின் நிலை சீராக வந்ததை அடுத்து வருடாந்த பொதுக் கூட்டம் கூட்டப்பட்டு புதிய நிருவாகத்தின் கீழ் இப்பொழுது இயங்கத் தொடங்கியுள்ளது. (43(

# இடர் உதவிக் கொடுப்பனவில் பாரபட்சம்

(கொழும்புத்துறை)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் சேவை புரிகின்ற பலதரப்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கான இடர் உதவிக் கொடுப்பனவுப்பணம் வழங்குவதில் பாரபட்சம் காட்டப்படுவதாக வட-கிழக்கு கட்டிடத் திணைக்கள ஊழியர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த காலங்களில் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியிலும் தங்கள் உயிர், உடமைகள் என்பவற்றைத் துரும்பாகக் கருதித் தங்கள் கடமையே பெரிதாக எண்ணி வேலை செய்த பல அரசாங்க ஊழியர்கள் உள்ளனர் என்றும் அரசாங்க செயலகத்தின் பல்வேறு ஊழியர்களுக்கும் இந்த ஊக்குவிப்பு வழங்கப்பட்டபோதிலும், தங்களுக்கு இந்த ஊக்குவிப்புப் பணம் வழங்கப்படாதது அதிர்ச்சியை அளித்துள்ளது என்றும் கட்டிடத் திணைக்கள ஊழியர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ் ஊக்குவிப்புப் பணம் இனிமேல் வழங்கப்படும் என்பதில் சந்தேகம் கொண்டுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். கொழும்பிலுள்ள மேலதிகாரிகளின் அசமந்தப் போக்கே இதற்குக் காரணம் என்றும். உரிய காலத்தில் இந்த ஊக்குவிப்புப் பணம் வழங்கப்பட்டிருந்தால் பாதிக்கப்பட்ட ஊழியர்கள் பயனடைந்திருக்க முடியுமென்றும் கட்டிடத் திணைக்கள ஊழியர்கள் முறையிட்டுள்ளனர். (24)

# கண்டெடுக்கப்பட்ட இரு காசோலைகள்

27000 ரூபா பெறுமதியான காசோலைகள் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள்


புதுவருட புத்தாண்டே வருக! வருக!!
வாழ்க ஈழநாதம் பத்திரிகை!


# "கிளிநொச்சி மக்கள் வங்கி கிளை கடன்வசதிகளை மேற்கொள்ளும்

## வங்கி முகாமையாளர்

(கிளிநொச்சி)

மக்கள் வங்கி பல கடன் வழங்கும் திட்டங்களை நாட்டு மக்களுக்கு அறிமுகம் செய்துவைத்துள்ளது. படித்துவிட்டு வேலையற்றிருக்கும் இளைஞர் யுவதிகளுக்கும், அன்றாடம் சிறு தொழில் செய்து சீவியம் நடாத்துபவர்களுக்கும், வன்செயல்களால் வீடுகள், வர்த்தகநிறுவனங்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கும் மக்கள் வங்கி கடன் வழங்கவுள்ளது.

கிளிநொச்சி மக்கள் வங்கி முகாமையாளர் திரு. சுப்பிரமணியம் லோகநாதன் ஈழநாதத்துக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

கிளிநொச்சி மக்கள் வங்கிக் கிளை இருபத்திநான்கு சந்தை வியாபாரிகளுக்கு கைமாற்றுக் கடனாக நாளாந்த பொருள் கொள்வனவுக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் வழங்கவுள்ளது. இதற்காக அந்த வியாபாரிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

18 வீத வட்டியுடன் ஒரு வருடத்தில் இப்பணத்தைக் கட்டி முடிக்க வேண்டும். படித்துவிட்டு வேலை வாய்ப்பின்றி இருக்கும் 18 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்ட இளைஞர் யுவதிகளுக்கு சுயவேலை வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள 10ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாது கடன் வழங்கப்படும்.

வன்செயலால் வீடுகள் வர்த்தக நிறுவனங்கள் சேதமுற்றால் அவைகளைத் திருத்திக் கட்டுவதற்கும் கடன் வழங்கப்படும். வீடு கட்டுவதற்கு ஒரு லட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபா வரை கடன் வழங்கப்படும். சேதமுற்ற வர்த்தக நிறுவனங்களைத் திருத்திக் கட்ட இரண்டு லட்சம் ரூபாவரை கடன் வழங்கப்படும்.

இக்கடனைப் பெறுபவர்கள் காணிப்பத்திரமோ (பெர்மிட்) உறுதியையோ பிணையாகக் கொடுக்க வேண்டும் வருடா வருடம் புதுப்பிக்கப்படும் காணிப் பெர்மிட்டுக்களுக்கு கடன்வழங்கப்படமாட்டாது சுவர்ணபூமி உறுதி வைத்திருப்பவர்களுக்கு இலகுவான கடன் வழங்கமுடியும். ஏனைய பர்மிட்டுகளுக்கு கடன் வழங்குவதனால் காணி ஆணையாளரினால் சிபார்சு செய்யப்பட்ட பர்மிட்டுகளுக்கு கடன் வழங்கப்படும்.

சாயம், தோட்டம் செய்தல், சைக்கிள் திருத்துதல் போன்ற சிறிய கைத்தொழில்களைச் செய்வோருக்கும் கடன்வழங்க உத்தேசிக்கப்பட்டு வருகிறது. இக்கடன் வழங்கப்படும் பட்சத்தில் இரண்டாயிரம் ரூபாவிலிருந்து பத்தாயிரம் ரூபா வரை தொழிலுக்கு ஏற்ப கடன் வழங்கப்படும்.

இது சம்பந்தமான மேலதிக விபரங்களுக்கு மக்கள் வங்கி முகாமையாளருடன் தொடர்பு கொள்ளும்படி கிளிநொச்சி மக்கள்வங்கி முகாமையாளர் திரு. சு. லோகநாதன் தெரிவித்துள்ளார்.

# பஸ் சீர்கேட்டினால் மாணவர் அவதி

(வந்தாறுமூலை)

மட்டக்களப்பு வாழைச்சேனை பஸ்போக்கு வரத்து ஒழுங்காக நடைபெறுவதில்லை இதனால் பாடசாலை மாணவர்களே பெரிதும் பாதிப்படைகின்றனர்.

காலையில் பெரும் சிரமத்தின் மத்தியில் இடி நெருக்குப் பட்டு பாடசாலைக்கு செல்ல வேண்டி உள்ளது.

எஞ்சிய மாணவர்கள் தாமதித்தே பாடசாலைக்கு செல்கின்றனர். சிலர் கவலையுடன் வீட்டுக்கு திரும்பிச் செல்கின்றனர். இதே போன்று பாடசாலை விட்டும் பசியுடன் தாமதித்தே வீடுவந்து சேர்கின்றனர்.

எனவே இந்த நிலை மாறுவதாயின் கடந்த பல வருடங்களாக நடைபெறாமல் இருக்கும் பாடசாலை சேவையினை நடத்தி மாணவர்கள் கஸ்ரத்தினை போக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என இப்பகுதி மக்கள் கேட்கின்றன.

# சின்னங்கள் அணிவிக்கும் வைபவம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு றோ. க. மகளிர் வித்தியாலயத்தில் மாணவத் தலைவர்கள், வகுப்புத் தலைவர்களுக்கு சின்னங்கள் அணிவிக்கும் நிகழ்ச்சி இடம்பெற்றது.

மாணவத் தலைவர்கள் ஒழுங்காகவும் முன்மாதிரியாகவும் தலைமைத்துவ பண்புகளை உடையவர்களாகவும் இருக்க வேண்டும் என அதிபர்


யாழ் நகரில்
இன்றைய சினிமா

வின்சர் - யாழ்
10·30 2.30 6.30
**BOBBY**
(உருது)
இனிய பாடல்களுடன் கூடிய காதல் காவியம்

81 வது நாளாக!!
நியூ சாந்தி (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
சூப்பர் ஸ்ரார்'
ரஜனி - அமலா நடித்த
**கொடி பறக்குது**
(கலர்)

7 வது வாரம்
மனோகரா - (யாழ்)
தினசரி 10. 30, 2.30, 6.30
ரஜனி, ரூபினி. நடித்த
**மனிதன்**
(கலர்)

ஜனத்திரள் காட்சிகள்
ஹரன் யாழ்.
10-30 2-30 6-30
கமலஹாசன்
சரண்யா நடித்த
**நாயகன்**
(கலர்)

லிடோ (யாழ்)
75வது நாளை நோக்கி
அரங்கு நிறைந்த காட்சிகள்
10. 30, 2. 30, 6. 30
★ பிரபு ★ சரிதா
**பூ- பூவா பூத்திருக்கு**
(கலர்)

ராஜா (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
**ராஜாதி ராஜா**
(கலர்)

128வது நாளை நோக்கி
அரங்கு நிறைந்த காட்சிகள்
வெலிங்டன் (யாழ்)
தினசரி
10. 30, 2. 30 6. 30
★ கார்த்திக் ★ குஷ்பு
**வருஷம் 16**
(கலர்)

வாழ்க ஈழநாதம்!

வரலாறு ஆண்டு 7, 1990 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பாடத்திட்டத்தை தழுவி எழுதப்பட்டது. ஆக்கம், ஆலோசனை: எம்.எஸ். அப்துல்ரஹீம், தி. கமலநாதன்

## தொழில் பங்காளர் தேவை


யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் 45 வருடமாக இயங்கும் ஹாட்வெயர் (இரும்புப் பொருட்கள்) ஸ்தாபனத்திற்கு முதலீட்டுடன் முழுநேர பங்காளர் தேவை விபரங்களுடன் எழுத்து மூலம் தொடர்பு கொள்ளவும்.

விளம்பர இல: 002

C/o· ஈழநாதம். 31 வைமன் வீதி, யாழ்ப்பாணம். (B/149)


## தேவை


சீமென்ற் வெற்று பைகள் (Cementy Empty Bags) தேவை இருப்பவர்கள் நேரில் தொடர்பு கொள்ளவும் அல்லது கொண்டு வரவும் நியாய விலை கொடுக்கப்படும்.

அண்ணா தொழிலகம் இணுவில்· (B-389)


## மக்கள் முன்னணி கிளை திறப்பு

(அம்பாறை மாவட்ட நிருபர்)

பாண்டிருப்பு இரண்டாம் வட்டார விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிக் கிளை அங்குரார்ப்பணக் கூட்டம், மக்கள் முன்னணி அம்பாறை மாவட்டப் பொறுப்பாளர் திரு. காஸ்ரோ தலைமையில் நடைபெற்ற போது தெரிவுவோர் நிருவாகிகளாகபின்வரு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. சண்முகம் சிவலிங்கம் (அதிபர்), செயலாளர்: திரு. எஸ். பரமேஸ்வரன், பொருளாளர்: திரு. கா. யோகசுந்தரம் இவர்கள் உட்பட இருபது பேர்கள் கொண்ட குழுவும் நியமிக்கப் பட்டது. (48)

## திறக்கப்பட்டது

(ஈச்சமோட்டை)

நாட்டின் நிலைமை காரணமாக இயங்காமல் இருந்த கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையம் இப்பொழுது திறக்கப்பட்டுள்ளது. நாட்டின் நிலை சீராக வந்ததை அடுத்து வருடாந்த பொதுக் கூட்டம் கூட்டப்பட்டு புதிய நிருவாகத்தின் கீழ் இப்பொழுது இயங்கத் தொடங்கியுள்ளது. (43(

யர்களுக்கான இடர் உதவிக் கொடுப்பனவுப்பணம் வழங்குவதில் பாரபட்சம் காட்டப்படுவதாக வட-கிழக்கு கட்டிடத் திணைக்கள ஊழியர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த காலங்களில் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியிலும் தங்கள் உயிர், உடமைகள் என்பவற்றைத் துரும்பாகக் கருதித் தங்கள் கடமையே பெரிதாக எண்ணி வேலை செய்த பல அரசாங்க ஊழியர்கள் உள்ளனர் என்றும் அரசாங்க செயலகத்தின் ஊழியர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ் ஊக்குவிப்புப் பணம் இனிமேல் வழங்கப்படும் என்பதில் சந்தேகம் கொண்டுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். கொழும்பிலுள்ள மேலதிகாரிகளின் அசமந்தப் போக்கே இதற்குக் காரணம் என்றும். உரிய காலத்தில் இந்த ஊக்குவிப்புப் பணம் வழங்கப்பட்டிருந்தால் பாதிக்கப்பட்ட ஊழியர்கள் பயனடைந்திருக்க முடியுமென்றும் கட்டிடத் திணைக்கள ஊழியர்கள் முறையிட்டுள்ளனர். (24)

## கண்டெடுக்கப்பட்ட இரு காசோலைகள்

27000 ரூபா பெறுமதியான காசோலைகள் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் அலுவலகத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளன. உரியவர்கள் தகுந்த அத்தாட்சியைக் காட்டி எமது காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

...திக் கட்டுவதற்கும் கடன் வழங்கப்படும். வீடு கட்டுவதற்கு ஒரு லட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபா வரை கடன் வழங்கப்படும். சேதமுற்ற வர்த்தக நிறுவனங்களைத் திருத்திக் கட்ட இரண்டு லட்சம் ரூபாவரை கடன் வழங்கப்படும்.

இக்கடனைப் பெறுபவர்கள் காணிப்பத்திரமோ (பெர்மிட்) உறுதியையோ பிணையாகக் கொடுக்க வேண்டும் வருடா வருடம் புதுப்பிக்கப்படும் காணிப் பெர்மிட்டுக்களுக்கு கடன்வழங்கப்படமாட்டாது சுவர்ணபூமி உறுதி வைத்திருப்பவர்களுக்கு இலகுவான கடன் வழங்கமுடியும். ஏனைய பர்மிட்டுகளுக்கு கடன் வழங்குவதனால் காணி ஆணையாளரினால் சிபார்சு செய்யப்பட்ட பர்மிட்டுகளுக்கு கடன் வழங்கப்படும்.

ஜனசவியத் திட்டத்தின்கீழ் கோழிவளர்ப்பு, நாற்று மேடை அமைத்தல், விவ

இருக்கும் பாடசாலை சேவையினை நடத்தி மாணவர்கள் கஸ்ரத்தினை போக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என இப்பகுதி மக்கள் கேட்கின்றன.

## சின்னங்கள் அணிவிக்கும் வைபவம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு றோ. க. மகளிர் வித்தியாலயத்தில் மாணவத் தலைவர்கள், வகுப்புத் தலைவர்களுக்கு சின்னங்கள் அணிவிக்கும் நிகழ்ச்சி இடம்பெற்றது.

மாணவத் தலைவர்கள் ஒழுங்காகவும் முன்மாதிரியாகவும் தலைமைத்துவ பண்புகளை உடையவர்களாகவும் இருக்க வேண்டும் என அதிபர் சங். சகோதரி லொறன்ரினா இவ் வைபவத்தில் கூறினார்.

உப அதிபர் திரு.எம்.எஸ் ஏ. ஒஸ்வேல்ட், ஆசிரியை சா. கிஷ்ணதாசன் ஆகியோரும் பேசினர்.

## வாகனங்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகிறது

(கிளிநொச்சி)

புது வருடத்திற்கான வாகன அனுமதிப் பத்திரங்கள் வழங்கும் வேலை கிளிநொச்சிக் கச்சேரியில் துரிதமாக நடைபெற்று வருகிறது.

இதுவரை வாகன அனுமதிப் பத்திரத்தைப் பெறத்தவறியவர்கள் இம்மாதம் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

அனுமதிப் பத்திரமின்றி வாகனங்களைச் செலுத்துவது தண்டனைக்குரிய குற்றமென கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.


பூந்திருக்கு
(கலர்)

ராஜா (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
ராஜாதி ராஜா
(கலர்)

128வது நாளை நோக்கி
அரங்கு நிறைந்த காட்சிகள்
வெலிங்டன் (யாழ்)
தினசரி
10. 30, 2. 30 6. 30
★ கார்த்திக் ★ குஷ்பு
வருஷம் 16
(கலர்)

புதுவருட புத்தாண்டே வருக! வருக!!
வாழ்க ஈழநாதம் பத்திரிகை!

M. M. B. திறம் அரிசி
வகைகளையும்
M. M. B. காரமான சுருட்டு
வகைகளையும்

கிளிநொச்சி நகரில்
நீங்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும்
மலிவு விலையிலும் பெற்றுக்கொள்ள
தலைசிறந்த ஸ்தாபனம்

மார்க்கண்டு அன் சன்ஸ்
பிரதான வீதி,
கிளிநொச்சி
B. 392

புதுவருடத்தை எமது மக்கள் இன்னலின்றி
திறம்பட கொண்டாட இறைவன்
அருள்புரிவாராக!

கிளிநொச்சி மாவட்டத்தில் அமோக விற்பனையில் முன்னிற்கும் "ஈழநாதம்" பத்திரிகைக்கு
எமது அன்பு கனிந்த வாழ்த்துக்கள்
உரித்தாகுக!

மணிக்கூட்டுவகைகள், பன்சி பொருட்கள்
எவர்சில்வர் பொருட்களை மலிவு விலையில்
பெற்றிட. . . .

தேவிகாஸ்
பிரதான வீதி,
கிளிநொச்சி.
B/394

வாழ்க ஈழநாதம்!

வெயில் தாங்க முடியவில்லை அதற்கு உங்கள் உடம்பிலிருக்கும் வெப்பத்தை போக்குவதற்கு நீங்கள் நாடவேண்டிய இடம்.

சோதிலிங்கம்
பிரதான வீதி,
கிளிநொச்சி.
(குளிர்பான விற்பனையாளர்)
(B/390)

வியபரம் பெருக
விளம்பரம் செய்க

தரமான, சுவையான ஐஸ் கிறீம் வகைகள்
தேவையானபோது நாடவேண்டிய இடம்!

சிவாஸ் கிறீம் ஹவுஸ்

ஐஸ் கிறீம் வகைகள், ஐஸ் பழம், ஐஸ் சொக், ஸ்பெஷல் ஐஸ் கிறீம், யோகட்கப் ஐஸ் கிறீம் வகைகள், குளிர் பானங்கள்

சிவாஸ் கிறீம் ஹவுஸ்

கோவில் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். கிளை; செல்வச்சன்னதி, தொண்டமானாறு.
B412

# ஐம்பதாயிரம் சோவியத் துருப்புக்கள் லித்வேனியாவுக்குள் பிரவேசம்!

(மொஸ்கோ)

லித்வேனியத் தலைநகரத்தில் சோவியத் துருப்புக்கள் பெருமளவில் நுழைந்துள்ளன. தலை நகரத்தின் மத்திய பகுதியை அடுத்து அமைந்துள்ள சோவியத் ராணுவ முகாம்கள் நோக்கி இந்த துருப்புகள் கடந்த சனிக்கிழமை காலை முன்னேறின. இந் நடவடிக்கையானது லித்வேனிய அரசு சொந்தப் படை அமைக்க தடையாக இருக்கும் என சோவியத் அதிகாரிகள் கருதுகின்றனர்.

இதற்கிடையில் லித்வேனியத் தலைவர் சோவியத் ஜனாதிபதி கொர்பச்சேவுக்கு இவ் துருப்புக்கள் குவிப்பது பற்றி ஆட்சேபனை தெரிவித்து தந்தியொன்றை அனுப்பியுள்ளார். லித்வேனியா மேலதிகமாக ராணுவப் படைகளை ஏற்படுத்த மாட்டாது எனவும் தம்மிடம் இருக்கும் தொண்டர் படைகளே தமக்கும் போதும் என்றும் அறிவித்திருக்கிறார். எல்லைக் காவல் மற்றும் இராணுவ பொலிஸ் படைகளுக்குப் பதிலாக தாம் படையினை அமைக்க விரும்பவில்லை என்றும் உறுதிப் படுத்தினர்.

சோவியத் படைகளின் எண்ணிக்கை ஏறக்குறைய 50,000க்கு குறையாது என்றும் கவசக வண்டிகள், ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுத்துவதற்கென ஜீப்புகள், 70 காலியான றக்குகள் போன்றனவும் லித்வேனிய தலைநகருக்கு கொண்டு வரப்பட்டன. இதனால் நகரத்தின் அமைதி குலைந்துள்ளது.

## கோவாவில் மூன்றுமாத காங்கிரஸ் ஆட்சிக்கு ஆபத்து!

(பனஜி)

கோவாவில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சட்டசபை சபாநாயகரும் மற்றும் ஆறுபேரும் அரசாங்கக் கட்சியிலிருந்து ராஜினாமாச் செய்ததால் காங்கிரஸ் ஆட்சிக்கு அங்கு நெருக்கடிகள் ஏற்பட்டிருக்கிறது.

கோவாவில் பிரதாப் சிங் ராணேயின் மூன்றுமாதகால காங்கரஸ் ஆட்சி இப்போது ஆட்டம் கண்டிருக்கிறது. ஆளும் கட்சியிலிருந்து வெளியேறிய சட்டசபை சபாநாயகரும் மற்றும் ஆறுபேரும் தங்களால் புதிய அரசை அமைக்க முடியுமென்று ஆளுநரிடம் தெரிவித்துள்ளனர்.

மகாராஷ்டிரவாதி கோமந்தக்தள உறுப்பினர்கள் 18 பேர், ஒரு சுயேச்சை ஆகியோருடன் வெளியேறி ஏழு காங்கிரஸ் உறுப்பினர்களும் சேர்ந்து முற்போக்கு ஜனநாயகமுன்னணி ஒன்று அமைக்கப்பட்டிருப்பதாக கோமந்தக்தளத் தலைவர் தெரிவித்தார்.

கோவாவில் எழுந்துள்ள புதிய அரசியல் நிலைபற்றி ஆராய்வதற்கு ரயில்வே அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் கோவா போயிருக்கிறார்.

முதலமைச்சர் ராணே நேற்று முன்தினமிரவு ஆளுநரைச் சந்தித்து தமது நிலையை விளக்கி ஒரு கடிதம் கொடுத்தார்.

## வன்செயலை நிறுத்தினாலே அஸாம் முன்னணியுடன் பேச்சு

### உள்துறை அமைச்சர் கூறுகிறார்

(புதுடில்லி)

அஸாம் ஐக்கிய விடுதலை முன்னணித் தீவிரவாதிகள் வன்முறையைக் கைவிடாவிட்டால், அவர்களுடன் பேச்சு நடத்துவதில்லை என்று மத்திய உள்துறை அமைச்சர் முக்தி முகமது சயித் கூறியிருக்கிறார். துப்பாக்கி மிரட்டலுக்குப் பயந்து பேச்சு நடத்த முடியாது என்று அவர் சொன்னார். அஸாமில் வேலை கிடைக்காமலிருப்பவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு மத்திய அரசு முழு ஒத்துழைப்புத் தரும் என்று அமைச்சர் முக்தி முகம்மது கூறினார்.

அனைத்து போடோ மாணவர் ... மாதம் 18 ஆம் தேதி மீண்டும் ஆரம்பமாகுமென்றும் அமைச்சர் சொன்னார்.

ஐக்கிய முன்னணியின் வன்செயல்களினால் எழக்கூடிய பிரச்சினைகளை நிர்வாக ரீதியிலும், அரசியல் ரீதியிலும் தான் சமாளிக்க வேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். மக்களின் மெய்யான துயரங்களை, தேசிய முன்னணி அரசு தீர்த்து வைக்குமென்றும் அவர் சொன்னார்.

## கலைவிழாவிற்கு ஏற்பாடு

(தீவுப்பகுதி)

நாட்டில் நிலவிய அசாதாரண நிலைகாரணமாக கடந்த சில வருடங்களாக நடைபெறாதிருந்த நயினாதீவு மணிபல்லவகலாமன்றத்தினரால் நடாத்தப்பட்டு வரும் மூன்று நாள் கலை விழா விரைவில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

இக்கலை விழாவிற்கு முன்னோடியாக பேச்சுப் போட்டிகள், கட்டுரைப் போட்டிகள் என்பன நடைபெற்று வருகின்றன. இவ்விழாவில் பல அறிஞர் பெரு மக்கள்கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன் தமிழர்கலையான நடனம், நாடகம், கவியரங்கு, பட்டி மன்றம் என்பனவும் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. (15)

## கோண்டாவிலில் அன்னை பூபதி நினைவஞ்சலிக் கூட்டம்

## திருவிழா விபத்தில் 25 பேர் பலி!

(திருவனந்தபுரம்)

கேரளத்தில் கொல்லம் என்ற இடத்தில் ஒரு கோவிலுக்குள் குவித்து வைக்கப்பட்டிருந்த பட்டாஸ் வாண வெடிகள் தீப்பற்றி வெடித்ததில் 25 பேர் வரை உயிர் இழந்துள்ளார்கள்.

திருவிழா முடிவில் வாண வேடிக்கைக்காக மக்கள் திரண்டிருந்த வேளையில் இவ் விபத்த இடம் பெற்றிருக்கிறது.

## வீதி விபத்தில் 23 பேர் பலி

(அமுதாப்பத்)

குஜராத்தில் மெற்சானா மாவட்டத்தில் நேற்று முன்தினம் நிகழ்ந்த வீதி விபத்தொன்றில் இருபத்தி மூன்று பேர் கொல்லப்பட்டனர். மற்றும் இருபத்தி மூன்று பேர் காயமடைந்தனர்.

## காஷ்மீரில் கொலை, கடத்தல்

(ஸ்ரீநகர்)

ஜம்மு காஷ்மீரில் ஒரு பொலிஸ் சுப்ரின்டனை தீவிரவாதிகள் சுட்டுக்கொன்றனர். இதேசமயம் உள்துறை அமைச்சர் முக்தி முகம்மது சயித்தின் புதல்வி சென்ற வருட இறுதியில் கடத்திச் செல்லப்பட்டபோது தீவிரவாதிகளுடன் சமரசப் பேச்சுக்களில் ஈடுபட்டிருந்த முஸ்தபா என்பவர் நேற்றுமுன்தினம் தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டார்.

## ஈழகேசரி பொன்னையா நினைவு நாள் விழா

ஈழகேசரி நா.பொன்னையா நினைவு தினம் எதிர்வரும்

கிரிக்கெட்

## மானிப்பாய் இந்து - கொக்குவில் இந்து போட்டியில் எவருக்கும் வெற்றியில்லை

### பாஸ்கரன் ஆட்டமிழக்காமல் 102 ஓட்டம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்குமிடையிலான கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிந்தது.

இப்போட்டியில் மானிப்பாய் இந்துவின் வீரர் பாஸ்கரன் சிறப்பாக அடி ஆட்டமிழக்காமல் 102 ஓட்டங்களைப் பெற்றார். இவரது ஆட்டத்தில் பன்னிரண்டு பவுண்டரிகளும் மூன்று ஸிக்சர்களும் அடங்கி இருந்தன.

முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி 4 விக்கெட் இழப்பிற்கு 210 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்தியது. பாஸ்கரன் ஆட்டமிழக்காமல் 102, கண்ணன் ஆட்டமிழக்காமல் 66 ஓட்டங்களைப் பெற்றனர். பார்த்திபராஜன் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

கொக்குவில் இந்துக் கல்லூரி அணி தனது முதல் இனிங்சில் 8 விக்கெட் இழப்பிற்கு 95 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது போட்டி முடிவடைந்தது. மானிப்பாய் இந்துவின் பாஸ்கரன் 17 ஓவர்கள் பந்து வீசி 15 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுகளைப் கைப்பற்றினார். (42

## சாவகச்சேரி ஆஸ்பத்திரிகுறைபாடுகளைத்தீர்க்க நோயாளர் நலன்புரிச்சங்கம் நடவடிக்கை

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் கோடை காலங்களில் கிணறுகள் வற்றி விடுதல் குழாய்க் கிணறு ஒன்றும் நீர்க்குழாய் ஒன்றும் புதிதாக இணைப்பதற்கு சங்கம் முழுச்செலவையும் பொறுப்பேற்கவுள்ளது.

இவ்வாறு சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் நடைபெற்ற தென்மராட்சி நோயாளர் நலன்புரிச் சங்க கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரசபை விசேட ஆணையாளரும் இச் சங்கத் தலைவருமான திரு. த நவரத்தினராசா தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றபோது அவர் தமது தலைமையுரையில் இந்த ஆஸ்பத்திரி குறைபாடுகள் குறித்து பத்திரிகைகளில் செய்திகள் வெளிவருகின்றன. இதனை எண்ண நமக்கு கவலையாக உள்ளது எனவே மக்கள் நலன் கருதி எல்லோரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் முன்னைய நிர்வாகத்தின் போதிய ஒத்துழைப்பு இன்மையே சங்கமுன்னேற்றத்தை தடை செய்தது என்றார்.

அங்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு கிளிநொச்சி, பளை, பூநகரி போன்ற இடங்களிலிருந்து நோயாளிகள் அதிகமானோர் இங்கு வருவதால் நிரந்தர மாவட்ட வைத்திய அதிகாரி ஒருவரை நியமனம் செய்ய வேண்டும்.

பதினேழு தாதிமார் பணியாற்றுவதற்கு பதிலாக பதினான்கு தாதிமார் உள்ளனர் மூவர் இடமாற்றம் செய்யப்பட்டதால் இந்த மூன்று இடங்களுக்கும் வேறு தாதிகளை நியமிக்கவேண்டும்.

சிற்றூழியர் அமைய ஊழியர் பற்றாக்குறையால் ஆஸ்பத்திரி வளவு சுத்திகரிக்கப்படுவதில்லை இதனைப் போக்க வேண்டும்

வரணி, மிருசுவில், கைதடி கிராமவைத்தியசாலைகளுக்கு நேரில் சென்று குறைகளை ஆராய்தல்.

சுகாதாரவைத்திய அதிகாரி அலுவலகத்தை மீண்டும் 1ஆம் வார்டில் முன்பிருந்த இடத்திற்கு மாற்றவேண்டும் இது தற்போது நுணாவிலில் இருப்பதால் பலருக்கு வசதியீனமாக உள்ளது.

விசேட நிபுணர் வைத்திய சேவையை மீண்டும் நடாத்தி மக்களின் செலவு நேர விரயத்தைப் போக்க ஆவன செய்தல்.

இது தொடர்பாக வட பிராந்திய சுகாதாரசேவைகள் உதவிப்பணிப்பாளரைப் பேட்டி காணுதல் என்றும் தீர்மானிக்கப்பட்டது. விடுதலைப் புலிகளின் சுகாதாரப் பொறுப்பாளர் திரு. செல்வராசாவும் கலந்துகொண்டார்.

## அருட் திரு. பொன்னையாவின் இன்று 50 வது ஜுபிலி



யாழ் புனித அடைக்கல அன்னை ஆலய பங்குக் குரு அருட் திரு. பிலிப் பொன்னையா தமது குருத்துவ பொன்விழாவை இன்று கொண்டாடுகிறார்.

1940 இல் குருவாக திருநிலைப்படுத்தப்பட்ட இவர் ஆரம்பத்தில் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் கீழ் பணி புரிந்தார். பின்னர் யாழ். மேற்றிராசத்தின் பல பங்குகளிலும் பங்குரவராக இருந்தார்.

அரசாங்கம் பாடசாலைகளைச் சுவீகரிக்க முன்பு பொது முகாமையாளராக இருந்தார். நாட்டு நிலைமையால் யாழ்ப்பாணத்தில் புதிய குருமடம் ஆரம்பிக்கப்பட்ட போது அதன் முதல் அதிபராக பதவி ஏற்றார்.

அனுராதபுரம், பாஷையூர், வவுனியா, மானிப்பாய், நாரந்தனை, கிளிநொச்சி, ஊர்காவற்றுறை, செட்டிகுளம், யாழ் பேராலயம் போன்ற இடங்களில் அரும்பணியாற்றினார். புனித மாட்டீனார் குருமடத்திலும் அதிபராக சில காலம் இருந்தார்.

இறுதியாக புதிதாக ஆரம்பிக்கப்பட்ட புனித பிரான்ஸிக்கு சவேரியார் குருமடத்தில் அதிபராக இருந்து பின்னர் தற்போது யாழ். புனித

# வன்செயலை நிறுத்தினாலே அஸாம் முன்னணியுடன் பேச்சு

## உள்துறை அமைச்சர் கூறுகிறார்

(புதுடில்லி)

அஸாம் ஐக்கிய விடுதலை முன்னணித் தீவிரவாதிகள் வன்முறையைக் கைவிடாவிட்டால், அவர்களுடன் பேச்சு நடத்துவதில்லை என்று மத்திய உள்துறை அமைச்சர் முக்தி முகமது சயித் கூறியிருக்கிறார். துப்பாக்கி மிரட்டலுக்குப் பயந்து பேச்சு நடத்த முடியாது என்று அவர் சொன்னார். அஸாமில் வேலை கிடைக்காமலிருப்பவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு மத்திய அரசு முழு ஒத்துழைப்புத் தரும் என்று அமைச்சர் முக்தி முகம்மது கூறினார்.

அனைத்து போடோ மாணவர் சங்கம், அஸாம் அரசு மற்றும் மத்திய அரசு ஆகியவற்றுக்கிடையேயான முத்தரப்புப் பேச்சுக்கள் அடுதத மாதம் 18 ஆம் தேதி மீண்டும் ஆரம்பமாகுமென்றும் அமைச்சர் சொன்னார்.

ஐக்கிய முன்னணியின் வன்செயல்களினால் எழக்கூடிய பிரச்சினைகளை நிர்வாக ரீதியிலும், அரசியல் ரீதியிலும் தான் சமாளிக்க வேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். மக்களின் மெய்யான துயரங்களை, தேசிய முன்னணி அரசு தீர்த்து வைக்குமென்றும் அவர் சொன்னார்.

நாட்டில் நிலவிய அசாதாரண நிலைகாரணமாக கடந்த சில வருடங்களாக நடைபெறாதிருந்த நயினாதீவு மணிபல்லவகலாமன்றத்தினரால் நடாத்தப்பட்டு வரும் மூன்று நாள் கலை விழா விரைவில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

இக்கலை விழாவிற்கு முன்னோடியாக பேச்சுப் போட்டிகள், கட்டுரைப் போட்டிகள் என்பன நடைபெற்று வருகின்றன. இவ்விழாவில் பல அறிஞர் பெரு மக்கள்கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன் தமிழர்கலையான நடனம், நாடகம், கவியரங்கு, பட்டி மன்றம் என்பனவும் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. (15)

காயமடைந்தனர்.

### காஷ்மீரில் கொலை, கடத்தல்

(ஸ்ரீநகர்)

ஜம்மு காஷ்மீரில் ஒரு பொலிஸ் சுப்ரின்டனை தீவிரவாதிகள் சுட்டுக்கொன்றனர். இதேசமயம் உள்துறை அமைச்சர் முக்தி முகம்மது சயித்தின் புதல்வி சென்ற வருட இறுதியில் கடத்திச் செல்லப்பட்டபோது தீவிரவாதிகளுடன் சமரசப் பேச்சுக்களில் ஈடுபட்டிருந்த முஸ்தபா என்பவர் நேற்றுமுன்தினம் தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டார்.

உள்ளது எனவே மக்கள் நலன் கருதி எல்லோரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் முன்னைய நிர்வாகத்தின் போதிய ஒத்துழைப்பு இன்மையே சங்கமுன்னேற்றத்தை தடை செய்தது என்றார்.

அங்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு கிளிநொச்சி, பளை, பூநகரி போன்ற இடங்களிலிருந்து நோயாளிகள் அதிகமானோர் இங்கு வருவதால் நிரந்தர மாவட்ட வைத்திய அதிகாரி ஒருவரை நியமனம் செய்ய வேண்டும்.

பதினேழு தாதிமார் பணியாற்றுவதற்கு பதிலாக பதினான்கு தாதிமார் உள்ளனர் மூவர் இடமாற்றம் செய்யப்பட்டதால் இந்த மூன்று இடங்களுக்கும் வேறு தாதிகளை நியமிக்கவேண்டும்.

சிற்றூழியர் அமைய ஊழி



# கோண்டாவிலில் அன்னை பூபதி நினைவஞ்சலிக் கூட்டம்

(கோண்டாவில்)

"பேரினவாத சக்திகளாலும், அந்நியநாட்டுப்படையினாலும் தமிழ் மக்கள் நசுக்கப்பட்டு அல்லலுற்ற வேளையில் அதற்கு எதிராக அஹிம்சைப் போராட்டம் நடாத்தி தன் உயிரையே அர்ப்பணித்துக் கொண்ட மாமேதைதான் அன்னை பூபதி" என்று கோண்டாவில் தில்லையம்பதி சிவகாமி அம்மன் ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு. எம். குணசிங்கம் கூறினார்.

அன்னை பூபதியின் ஞாபகார்த்தக் கூட்டம் கோண்டாவில் வடக்கு மத்திய கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

இ. யோகராஜா தலைமையில நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. குணசிங்கம் தொடர்ந்து பேசுகையில் அநியாயங்கள் என்றுமே நிலைப்பதில்லை. இதுதான் நியதி. இந்த நியதிக்கு ஒப்பவே உலகத்தின் நான்காவது படைபலம் கொண்ட இந்தியப் படைகள்எம் இளம் வேங்கைகளால் சின்னாபின்னமாக்கப்பட்டு சிதறி ஓடியதும், இன்று நாம் தலைநிமிர்ந்து வாழும் நிலை ஏற்பட்டதுமாகும்' என்றும் கூறினார். (34)

### ஈழகேசரி பொன்னையா நினைவு நாள் விழா

ஈழகேசரி நா. பொன்னையா நினைவு தினம் எதிர் வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு குரும்பசிட்டி சன்மார்க்கசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சித்திரவித்தியாதிகாரி கலாகேசரி ஆ. தம்பித்துரை தலைமையில் இவ்விழா நடைபெறும்

சட்டத்தரணி திரு. பொன். பூலோகசிங்கம் நினைவு தின உரை நிகழ்த்துவார்.

அன்றைய தினம் திருமகள் அழுத்தகத்தை அரைநூற்றாண்டுக்கு மேலாக வளர்த்து முன்னோடி அச்சகமாக்கிய திருவாளர்கள் மு. சபாரத்தினம், செ. சின்னத்துரை, ஆ. முத்தையா ஆகியோர் பாராட்டி கௌரவிக்கப்படுவார்.

# வண. மதுரநாயகம் அடிகளின் குருத்துவ ஜூபிலிவிழா இன்று

(கிளிநொச்சி)

கிளிநொச்சி லோங்ஸ் நிறுவன அதிபர் அதி. வண. பிதா ரீ ஏ. ஜே. மதுரநாயகம் அடிகள் தமது துறவற வாழ்வின் ஐம்பதாவது ஆண்டு விழாவை இன்று கொண்டாடுகிறார்.

யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரியில் பத்து வருடங்களாக அதிபராக இருந்த இவர் பாடசாலையைவிட்டு வெளியேறிய மாணவர்களுக்கு தொழிற் பயிற்சி அளிக்கும் நோக்குடன் இந்த லோங்ஸ் நிறுவனத்தை 1068இல் சென். பற்றிக்ஸ் கல்லூரியிலே ஆரம்பித்தார். பின்னர் தாம் பதவியிலிருந்து ஓய்வு பெறும்போது அதனை கிளிநொச்சி எட்டாம் வாய்க்காலுக்கு மாற்றினார்.

யாழ்ப்பாண மேற்றிராசனத்தில் மறைமாவட்ட முதல்வர் செயலாளர், கத்தோலிக்கப் பாடசாலைகளின் பொது முகாமையாளர் போன்ற பல உயர் பதவிகளையும் வகித்திருந்தார். யாழ். மேற்றாசனத்தில் சில இடங்களில் பங்கு குருவாகவும் பணியாற்றினார்.

அனுராதபுரம் புனித. சூசையப்பர் கல்லூரியிலும் சில காலம் அதிபராக இருந்து சிங்கள சகோதரரிடம் பெரும் மதிப்பையும் பெற்றார்.

னையா தமது குருத்துவ பொன்விழாவை இன்று கொண்டாடுகிறார்.

1940 இல் குருவாக திருநிலைப்படுத்தப்பட்ட இவர் ஆரம்பத்தில் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் கீழ் பணிபுரிந்தார். பின்னர் யாழ். மேற்றிராசத்தின் பல பங்குகளிலும் பங்குரவராக இருந்தார்.

அரசாங்கம் பாடசாலைகளைச் சுவீகரிக்க முன்பு பொது முகாமையாளராக இருந்தார். நாட்டு நிலைமையால் யாழ்ப்பாணத்தில் புதிய குருமடம் ஆரம்பிக்கப்பட்ட போது அதன் முதல் அதிபராக பதவி ஏற்றார்.

அனுராதபுரம், பாஷையூர், வவுனியா, கோப்பாய், நாரந்தனை, கிளிநொச்சி, ஊர்காவற்றுறை, செட்டிகுளம், யாழ் பேராலயம் போன்ற இடங்களில் அரும்பணியாற்றினார். புனித மாட்டீனார் குருமடத்திலும் அதிபராக சில காலம் இருந்தார்.

இறுதியாக புதிதாக ஆரம்பிக்கப்பட்ட புனித பிரான்ஸிக்கு சவேரியார் குருமடத்தில் அதிபராக இருந்து பின்னர் தற்போது யாழ். புனித அடைக்கல அன்னை தேவாலயத்தில் பணியாற்றுகிறார்.

அருட் திரு. கில்லறி ஜெபரேசன்

### தியாகிகளுக்கு நினைவுச் சின்னம்

(சாவகச்சேரி)

"தியாகமும், தொண்டும் எமது இளைஞர்களின் பாரம்பரியச் சொத்து. இந்த அடிப்படையிலே நமது வீர வேங்கைகள் செய்த தியாகங்கள் அளப்பரியன".

எமது இனத்திற்காகத் தமது இன்னுயிரைத் தியாகஞ் செய்த புனித தியாகிகளை நாம் மதிப்பது உண்மையானால் நாம், எம்மால் முடிந்த வரை அவர்களுக்கு ஓர் நினைவுச் சின்னம் அமைக்க வேண்டும்.

கல்வயலில் வீரவேங்கை பொன்னம்பலத்தின் தியாகத்தை நினைவுகூரும் முகமாக, பொன்னம்பலம் விளையாட்டு மைதானம் சிரமதான மூலம் துப்பரவு செய்யப்பட்டது.

இளைஞர்களால் மேற்கொள்ளப்பட்ட இச்சிரமதானத்தை ஆரம்பித்து வைத்த பொழுது திரு. கருணா மேற்கண்டவாறு கூறினார்.

வீரவேங்கை பொன்னம்பலம் 1986 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் மட்டக்களப்பில், இலங்கை இராணுவத்தினருடன் மேற்கொண்ட நேரடி மோதலின்போது வீரமரணமடைந்தார். அவர் பெயரில் கல்வயலில் ஒரு வீதி ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்தது.

இப்பொழுதுதியாகி பொன்னம்பலம் நினைவாக ஒரு விளையாட்டு மைதானமும் அமைக்கப்பட்டுள்ளது, (35)

# பாண்டிருப்பு பாடசாலைக்கு கோட்டுக்கிணறு அன்பளிப்பு

(அம்பாறை)

பாண்டிருப்பு இந்து மகா வித்தியாலயத்தில் நீண்டகாலமாக இருந்துவந்த குடி தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்குமுகமாக இங்கு பொதுமக்களால் ஒரு கொட்டுக் கிணறு அன்பளிப்புச் செய்யப்பட்டு மாணவர்கள், பொதுமக்களால் அவை நாட்டப்பட்டுள்ளன.

இவ்வித்தியாலயத்தில் இருந்த கிணறு ஒன்று அண்மையில் பிடுங்கப்பட்டதைத் தொடர்ந்து இங்குள்ள மாணவர்கள் அயல் வீடுகளுக்குச் சென்று தண்ணீர் குடித்து வந்தனர்.

இந்நிலையைப் போக்குமுகமாக இங்கு புதிதாக நியமனம் செய்யப்பட்ட அதிபர் திரு. சண்முகம் சிவலிங்கம் எடுத்த நடவடிக்கையின் பயனாக மேற்படி கொட்டுக் கிணறு அன்பளிப்பாகக் கிடைத்தது குறிப்பிடத்தக்கது.

இம்மகா வித்தியாலயத்தின் தேவைகள் சம்பந்தப்பட்ட இலாகாவினால் நிறைவேற்றப்படாமல் இருந்து வருவதைத் தொடர்ந்தே பொது மக்கள் உதவிகள் கிடைக்க ஆரம்பித்துள்ளன. புதிய அதிபரின் நியமனத்துக்கு ஆதரவு தெரிவிக்குமுகமாகவே பொது மக்களால் பாடசாலையின் பல தேவைகள் பூர்த்தியாக்கப்படுமெனவும் நம்பப்படுகின்றது. (48)

### வெள்ள நிவாரண கொடுப்பனவுகள்

(வந்தாறுமூலை)

வந்தாறுமூலைப் பகுதியில் கடந்த ஜனவரி மாதம் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தற்போது கிராமசேவை உத்தியோகத்தர் ஊடாக கூட்டுறவுச் சங்கக் கடைகளில் நிவாரணப் பொருட்கள் வழங்கப்படுகின்றன.

குடும்பம் ஒன்றுக்கு 2 கிலோ கோதுமை மாவும் 2 கிலோ அரிசியும் 1/2 கிலோ சீனியும் வழங்கப்படுகிறது.

# கமநலசேவை நிலையங்களூடாக விவசாயிகளுக்கு உதவிகள்

(கிளிநொச்சி)

கமநல சேவை நிலையங்களூடாக விவசாயிகளுக்கு மண்வெட்டி, பசளை, கிருமிநாசினி ஆகியன மிக விரைவில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகக் கிளிநொச்சி கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகஸ்தர் திரு. எஸ். உருத்திரேசன் தெரிவித்துள்ளார்.

நீர் வரி, ஏக்கர் வரி ஆகியவற்றைக் கட்டி பற்றுச்சீட்டுப் பெற்றவர்கள் மட்டுமே சிறுபோகப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சிறுபோகச் செய்கைக்கான தண்ணீர்ப் பங்கை மாற்ற விரும்புபவர்கள் கமநல சேவை நிலையங்களிலிருந்து அதற்குரிய விண்ணப்பங்களைப் பெற்று, பூர்த்தி செய்து தமது தண்ணீர்ப் பங்கை, மற்றவருக்கு மாற்றிக் கொடுக்கலாம் எனவும் தெரிவித்தார்.

### வீதியின் அவலம்

(யாழ்ப்பாணம்)

தொண்டமனாறு - உடுப்பிட்டி வீதி கடந்த ஆறு வருடங்களாக திருத்தப்படாமல் உள்ளது இது குறித்து வீதிகள் அபிவிருத்தி அதிகார சபைக்கு விண்ணப்பித்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இந்த வீதி திருத்த முடியாமல் போனது தற்போது நிலமை வழமைக்கு திரும்புவதால் சம்பந்தப்பட்டவர்கள் திருத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளது.

### கௌரவ விருது வழங்கி கௌரவிக்கப்படுவர்

மதி கலைஞர் வட்டம் (மகவம்) ஈராண்டிற்கொருமுறை, 25 ஆண்டுகளுக்கு மேல் சேவையாற்றிய கலைஞர் ஒருவருக்கு கௌரவ விருதினை வழங்கிவருகிறது. இந்த வகையில் 1989 ஆம் ஆண்டிற்குரிய விருது பெறும் கலைஞரை தெரிவு செய்வதற்கான கூட்டம்அண்மையில் மதி அக்கடமி மண்டபத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் ஒப்பனைக் கலைஞர் திரு சாமுவேல் டெஞ்சமின் 1989 கௌரவிருதுக்குரியவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். கௌரவ விருது வழங்கும் வைபவம் ஏப்ரல் 14 ஆம் திகதி நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது.

### விளையாட்டுப் போட்டி

(கல்லாறு - களுவாஞ்சிக்குடி)

அண்மையில் பெரியகல்லாறு மகாவித்தியாலய விளையாட்டுப் போட்டி அதன் மைதானத்தில் நடைபெற்றது.

சில வருடங்களின் பின் அதி சிறப்பாகவும், சுதந்திரமாகவும், அதிக அளவில் பொது மக்களும் கலந்து கொண்ட பிரமாதமான நிகழ்ச்சியாக இது அமைந்தது.

கடந்தவருட விளையாட்டுப் போட்டி கடைசி நேரத்தில் ஆயுதக் கோஷ்டி ஒன்றின் வருகையால் பொலிவிழந்ததும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாண்டும் நெய்தல் இல்லம் (நீலம்) அதிக புள்ளிகளைப் பெற்றது மீண்டும் தனது முதலாம் இடத்தைத் தக்க வைத்துக் கொண்டது. அலங்காரத்தில் முல்லை (பச்சை) முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

இவ் விளையாட்டுப் போட்டியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் கல்லாறு பொறுப்பாளர் 'இனு'வும் வெற்றிபெற்ற விளையாட்டு வீராங்கனைகளுக்கும், வீரர்களுக்கும் சான்றிதழ்களை வழங்கியது குறிப்பிடத்தக்க அம்சமாகும். பிரதம அதிதியாக கல்வியதிகாரி திரு. எஸ். சோமயானந்தம் கலந்து கொண்டார்.

பலசரக்குப் பொருட்களை நிதான விலையில் பெற்றிட

A. T. M.
அன் சன்ஸ்

பிரதான வீதி,
கிளிநொச்சி.
(B/398)

கிராமசேவையாளர் சங்கம் கோரிக்கை

# சைக்கிள் அலவன்ஸ் ரூ. 150 அதிகரிக்கப்பட வேண்டும்.

(மட்டக்களப்பு)

கிராம சேவை அலுவலகர்களுக்கான அலுவலக நகர் ரூபா 300, கிராமம் ரூபா 100 என அதிகரிக்கப்படல் வேண்டும். என்ற கோரிக்கை அண்மையில் கிழக்கிலங்கை கிராம சேவை அலுவலகர் சங்க வருடாந்த மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

ஏனைய தீர்மானங்கள் வருமாறு

கிராமசேவை அலுவலகர்களின் நிர்வாகம் கச்சேரியின் ஏனைய உத்தியோகத்தர்களின் நிர்வாகப் பகுதியுடன் இணைக்கப்பட்டுள்ளதால் சில வேளைகளில் எமது அலுவல்கள் தாமதமாகவே முடிவடைவதை பல தடவைகள் மேலதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. தற்போது கிராமசேவை அலுவலகர்களின் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளதால் கிராம சேவை அலுவலர்களுக்கென கச்சேரியில் தனியான நிர்வாகப் பகுதி ஒன்று திறக்கப்படல் வேண்டும்.

கிராமசேவை அலுவலர்களது நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட திணைக்களங்களில் ஏற்படும் வெற்றிடங்கள் நிரப்பப்படும்போது கிராம சேவை அலுவலகர்சளுக்கென குறிப்பிட்ட வீதம் ஒதுக்கப்படல் வேண்டும்.

சைக்கிள் அலவன்ஸ் ரூபா 150/- ஆக அதிகரிக்கப்படல் வேண்டும்.

கஷ்டப்பிரதேசங்களில் கடமை புரியும் ஆசிரியர்களுக்கு கஷ்டப்பிரதேச அலவன்ஸ் வழங்கப்படுவது போன்று கஷ்டப்பிரதேசங்களில் கடமை புரியும் கிராம சேவை அலுவலர்களுக்கும் கஷ்டப்பிரதேச அலவன்ஸ் வழங்கப்படல் வேண்டும்.

உணவு முத்திரைகள் எழுதும் வேலைக கிராமசேவை அலுவலர்களுக்கு வழங்கப்படுவதுடன் எழுதுவதற்கும், கொடுப்பதற்கும் ஒரு உணவு முத்திரைக்கு ரூபா 1/- வீதம் வழங்கப்படல் வேண்டும்.

புதன்கிழமைகளில் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்துக்கு சமூகமளிக்கும்படி கிராமசேவை அலுவலர்சள் உதவி அரசாங்க அதிபர்களால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். அப்படிச் செய்வதற்கு பிரயாணப்படி வழங்கப்படல் வேண்டும்.

சமூக சேவைகள் டிப்ளோமா பயிற்சி வகுப்புக்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

இதுவரை மேசைகள், கதிரைகள், வாங்குகள் அறிவித்தல் பலகைகள், அலுவலகப்பை மற்றும் பொருட்சளும் வழங்கப்படாதுள்ள கிராம சேவை அலுவலர்களுக்கு இவற்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

கிழக்கிலங்கை கிராமசேவை அலுவலர் சங்கத்துக்கென அலுவலகம் ஒன்றை அமைப்பதற்கு மாவட்ட அரசாங்க அதிபர் அவர்கள் காணித்துண்டொன்றை புளியத்தீவு கிராமசேவை அலுவலர் பகுதிக்குள் தந்துவ வேண்டும்.

(37)

## புதிய சங்கம்

(கொழும்புத்துறை)

சாவகச்சேரி ஏற்றுமதி உற்பத்திக் கிராம மக்கள் கொம்பனி ஊழியர்களைக் கொண்ட “ சாவகச்சேரி ஏற்றுமதிக் கிராம சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர் தலைவர் திருமதி இராஜேஸ்வரி துரைச்சாமி, உப தலைவர் செல்வி ஆர். புஷ்பமலர், செயலாளர் திரு. வ. திரவிய நாயகம் உப செயலாளர் செல்வி கே. சுபாஷினி பொருளாளர் செல்வி. எஸ். சிறீ காந்தரூபி, நிர்வாக உறுப்பினர்கள் திரு. ரி. மகேந்திரம் திரு. கே. தெய்வேந்திரம் பிள்ளை. (24)

எமது வாடிக்கையாளர்களுக்கு பிறக்கும் புதுவருட பிறப்பில் எமது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக!

வெல்க ஈழநாதம் பத்திரிகை விற்பனையிலும் முன்னோடியாய் நிற்க மலர்க ஈழம்!

உங்கள் பயிர்களை பூச்சி, புழுக்கள் அழிக்கின்றனவா?
கவலை விடுங்கள், நல்ல பயிர்களை உண்டாக்குங்கள். அதற்கு கீழ்கண்ட முகவரிக்கு செல்லுங்கள்.

பிரபல
கிருமிநாசினி விற்பனையாளர்கள்

தர்மராஜா ஸ்தாபனம்
பிரதான வீதி,
கிளிநொச்சி.
(B-391)

ஈழநாதமே வாழ்க!

கிருமிநாசினி, உரவகைகளை மலிவு விலையில் பெற்றிட

கஜநிதி
ஸ்ரோர்ஸ்
பிரதான வீதி,
கிளிநொச்சி.
(B/396)

இன்று ஈழமண்ணில் தரமான பத்திரிகையும், மக்கள் விரும்பிப் படிக்கும் பத்திரிகையும் ஈழநாதமே! வாழ்க!! வளர்க உன்பணி.

வாடிக்கையாளர்களுக்கு எமது புதுவருட வாழ்த்துக்கள் உரித்தாகுக!

புதுவருடத்தை முன்னிட்டு
அழகிய டிசைன்களில்

சேட் வகைகள்

லோங்ஸ் வகைகள்

பெண்களுக்கேற்ற அழகிய டிசைன்களிலும்
சேலைகளை
மலிவு விலையிலும் பெற்றிட

சாந்தி ரெக்ஸ்ரைல்ஸ்
பிரதான வீதி,
கிளிநொச்சி.
B.393

மின்சார உபகரணப் பொருட்களை
மலிவு விலையில் பெற்றிட

கிருஷ்ணா ஏஜென்சி
பிரதான வீதி,
கிளிநொச்சி.
B/399

ஈழநாதமே வாழ்க!

நியூ லக்சுமீஸ்
252, பிரதான வீதி,
கிளிநொச்சி.

பாட்டா, டி. எஸ். ஐ. எல்பா, லக்பா, அஜந்தா, பாக்கு, லக்ஸ்மீஸ், ரெக்னிக்ஸ் ஆகியவற்றின் பாதனித் தயாரிப்புக்களையும், பிரயாணத்திற்கேற்ற பாக் (Bag) வகைகளையும், தொப்பி வகைகளையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

நவீனபாணிப் பாதணிகளின்
கண்கவர் காட்சியகம்
B/403

ஈழநாதம் பத்திரிகை வாசகர்களுக்கு கிளிநொச்சி மாவட்ட மக்கள் சார்பிலும் எங்கள் “மக்கள் குரல் தமிழ் ஓசை” சார்பிலும் புதுவருட வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்!

மக்கள் குரல் தமிழ் ஓசை
வர்த்தக விளம்பர சேவை
பிரதான வீதி,
கிளிநொச்சி.

விஷேட குறிப்பு:-
இவ் விளம்பர சேவை கலை, கலாச்சார அலை

ஈழநாதமே நீ வாழ்க!

மின்சார உபகரணப்
பொருட்கள் விற்பனையா

ஈழநாதம் வாழ்க! வளர்க!!



ஈழநாதம் வாழ்க

லோங்ஸ் வகைகள்

பெண்களுக்கேற்ற அழகிய டிசைன்களிலும்

சேலைகளை

மலிவு விலையிலும் பெற்றிட

## சாந்தி ரெக்ஸ்ரைல்ஸ்

பிரதான வீதி,

கிளிநொச்சி.

B. 393

ஈழநாதம் வாழ்க
வாடிக்கையாளர்களுக்கு
எமது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்
உரித்தாகுக !

அழகிய அச்சு வேலைகளுக்கு!
நீங்கள் செல்ல வேண்டிய
இடம்

## றோயல் பிறின்ரேஸ்

அன்

## பப்பிளி சேர்ஸ்

பிரதான வீதி,
கிளிநொச்சி.

(B/401)

ஈழநாதம் வாழ்க!

புதுவருடம் கொண்டாடவிருக்கும் தமிழ் மக்களுக்கு எமது அன்புகனிந்த வாழ்த்துக்கள் உரித்தாகுக!

வாகன உதிரிப்பாகங்களை

மலிவு விலையில் பெற்றிட

## சிவன் மோட்டோர்ஸ் ஸ்ரோர்ஸ்

பிரதான வீதி,
கிளிநொச்சி.

B/400

நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

இதுவரை மேசைகள், கதிரைகள், வாங்குகள் அறிவித்தல் பலகைகள், அலுவலகப்பை மற்றும் பொருட்களும் வழங்கப்படாதுள்ள கிராமசேவை அலுவலர்களுக்கு இவற்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

கிழக்கிலங்கை கிராமசேவை அலுவலர் சங்கத்துக்கென அலுவலகம் ஒன்றை அமைப்பதற்கு மாவட்ட அரசாங்க அதிபர் அவர்கள் காணித்துண்டொன்றை புளியத்தீவு கிராமசேவை அலுவலர் பகுதிக்குள் தந்துவ வேண்டும்.

(37)

ஈழநாதமே நீ வாழ்க!

மின்சார உபகரணப் பொருட்கள் விற்பனையாகள்

## முருகன் எலக்ரிக்கல்ஸ்

பிரதான வீதி,
கிளிநொச்சி.

(B/404)

புது வருடம் இன்று மக்கள் கொண்டாடும் வேளை யில்! மக்கள் இன்று விரும்பிப் படிப்பது ஈழநாதம் பத்திரிகை தான்.
வாழ்க, மலர்க,
உன் பணி

## சுபாஜினி ரேடர்ஸ்

பிரதான வீதி,
கிளிநொச்சி.

(திருமிநாசினி வியாபாரிகள்)

(B/395)

கிளிநொச்சி. B/399

ஈழநாதம் பத்திரிகை வாசகர்களுக்கு
கிளிநொச்சி மாவட்ட மக்கள் சார்பிலும்
எங்கள் "மக்கள் குரல் தமிழ் ஓசை"
சார்பிலும் புதுவருட வாழ்த்துக்களை
தெரிவித்துக் கொள்கின்றோம்!

## மக்கள் குரல் தமிழ் ஓசை

### வர்த்தக விளம்பர சேவை

பிரதான வீதி,
கிளிநொச்சி.

விஷேட குறிப்பு:-

இவ் விளம்பர சேவை கலை, கலாச்சார அவை ஊடாக நடாத்தப்பட்டு வருகின்றது.

இதில் வரும் நிதிகள் யாவும் மறைந்து சிதைந்து போன கலாசாரத்தை மீண்டும் எமது ஈழமண்ணில் மீட்டெடுப்பதற்கு இவ் வர்த்தக விளம்பர சேவை முன்னோடியாக சேவையாற்றுகின்றது என்பதை தங்களுக்கு அறிவிக்கின்றோம்.

மக்கள் குரல் தமிழ் ஓசை
கிளிநொச்சி

(B-405)

எமது வாடிக்கையாளர்களுக்கு
புது வருட வாழ்த்துக்கள் உரித்தாகுக!

"வாழ்க ஈழநாதம்"

ஆமைச்சர், றிவைண்டிங், எலெக்ரிக்கல் வேக்ஸ் மோட்டோர், டயனமோ் கட்டவுட், வயரிங் திருத்திக் கொடுப்பவர்கள்
எலெக்ரிக் வெல்டிங் செய்பவர்கள்.
நம்பிக்கையுடனும், அன்பு உபசரணையுடனும் கிளிநொச்சி மாவட்டத்தில் அளப்பரிய சேவைகள் செய்யக் காத்திருக்கிறார்கள்

## குணம்ஸ் மோட்டோர்ஸ்

பிரதான வீதி,
கிளிநொச்சி

உரிமையாளர் :- மக்கள் சேவையாளர்
க. நற்குணம்
கிளிநொச்சி


B/397

வகைகளையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

நவீனபாணிப் பாதணிகளின்
கண்கவர் காட்சியகம்

B/403

ஈழநாதம் வாழ்க! வளர்க!!



தியாகதீபம் அன்னை பூபதிக்கு
எமது
இதய அஞ்சலிகள்

## பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கம்

பளை. B. 152

இன்னும் சில நாட்களில் உதிக்கப் போகும் புது வருடத்தில் தமிழ் மக்கள் சிரும், சிறப்புடன் வாழ கந்தன் அருள் புரிவாராக
வாழ்க ஈழநாதம்!

பலசரக்குச் சாமான்களை
நம்பிக்கையுடன்
நிதான விலையில் பெற்றிட

## லோட்டர்ஸ் ஸ்ரோர்ஸ்

பிரதான வீதி, கிளிநொச்சி.

(B/402)

சிந்தனைக்கு

நியாயமே வலிமை என்ற
உறுதி நமக்கு வேண்டும்

- ஆபிரகாம் லிங்கன்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 27 - 03 - 90

## இலட்சியத்தின் வெற்றி

இலங்கை மண்ணிலிருந்து இந்திய இராணுவம் முற்றாக வெளியேறிவிட்டது.

இலங்கைக்கு வந்த போர்ச்சுக்கீஸியர் நூற்றிஐம்பது ஆண்டுகள் இங்கே தங்கியிருந்தனர்.

இதன்பின் இங்கு வந்த ஒல்லாந்தர் எனும் டச்சுக்காரர்களும் நூற்றைம்பது வருஷம் இலங்கையிலிருந்தனர்.

தொடர்ந்து இங்கு வந்த பிரிட்டிஷ்காரரும் நூற்றைம்பது வருடங்கள் இலங்கையை விட்டுப் போகாமலிருந்தனர்.

இலங்கைக்கு வந்த இந்திய இராணுவமும் இங்கிருந்து நூற்றைம்பது வருடங்களுக்குப் போகமாட்டாதென்றே பலரும் கருதினர்.

இந்திய இராணுவம் இங்கிருந்து போகுமா போகாதா என்ற கேள்வியைவிட இந்திய இராணுவம் இங்கிருந்து போகக்கூடாது என்று ஏற்பாடு செய்த ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும் கூட்டங்களும் எடுபடாமல் போனதும் ஆச்சரியமல்ல.

இந்தக் கூட்டங்களுக்கும் ஆர்ப்பாட்டங்களுக்கும் ஏற்பாடு செய்தவர்கள் இந்திய இராணுவம் போவதற்கு முன்னரே தப்பியோடியதுதான் வேடிக்கை!

உலகின் நாலாவது பெரிய இராணுவத்தை, தென்னாசியப் பிராந்தியத்தின் வல்லாதிக்கத்தை விடுதலைப்புலிகள் எதிர்த்துப் போராடத் தொடங்கியபோது "இது மடத்தனம்; இந்தியாவை எதிர்த்து நிற்க முடியுமா?" என்று கேட்டவர்கள் பலப்பலர்.

"தலைவர் பிரபாகரனின் இரும்பு போன்ற இலட்சிய உறுதியும், தலைசிறந்த போர்முறைத்திட்டமும் ராஜதந்திர சாணக்கியமும் போராளிகளின் அற்புதமான தியாகங்களும் எமது இயக்கத்தின்மீது மக்களுக்குள்ள நம்பிக்கையுமே இந்தியப்படை எமது மண்ணிலிருந்து


இந்திய - புலிகள் போர் ஒரு கண்ணோட்டம்

# இந்திய - புலிகள் ஈராண்டுப்போர்

# தென்னாசியாவின் வரலாற்று நிகழ்வு

**1989,** ஐப்பசி 10ஆம் திகதியுடன் இரண்டு ஆண்டுகள் பூர்த்தியாகிய இந்திய-புலிகள் போர் தென்னாசியக் கண்டத்தில் ஒரு புதிய அரசியல் இராணுவ திருப்பத்தை ஏற்படுத்திய ஒரு மாபெரும் வரலாற்று நிகழ்வாகும். உலகத்தின் மிகப்பெரிய ஒரு இராணுவத்தை, ஒரு பிராந்திய வல்லாதிக்க பூதத்தை. தனித்து நின்று போராடி முழு உலகத்தையுமே திகைப்பில் ஆழ்த்திய மகத்தான ஒரு இராணுவ சாதனையை புலிகள் இயக்கம் படைத்தது. எமது இயக்கத்தின் இந்த ஒப்பற்ற இராணுவ வெற்றி தமிழீழ விடுதலைப் போராட்டப் பாதையில் மட்டுமன்றி தென்னாசியாவின் அரசியல் - பூகோள சூழ்நிலைகளிலும் பாரிய தாக்கங்களை விளைவிக்கும் என்பது திண்ணம்.

தமிழீழ மக்களின் தேசிய சுதந்திரப்போராட்டம் தனது நீண்ட வரலாற்றுப் பாதையில் பலவடிவங்களை எடுத்து, பல திருப்பங்களை அடைந்து, பல நெருக்கடிகளைச் சந்தித்து, தனக்கே உரித்தான தனித்துவத்துடன் முன்னேற்றம் கண்டு வருகிறது. இந்த வரலாற்றுப் பரிணாமத்தில் இந்திய - புலிகள் போரும் ஒரு இணைபிரியாத அங்கமாக, தவிர்க்க முடியாத ஒரு கட்டமாக, உயர்நிலை எய்திய போராட்ட வடிவமாக அமையப் பெற்றது என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். இதன் அடிப்படையில் இந்திய - புலிகள் போரின் சிக்கலான பரிமாணங்களையும், எமது விடுதலைப் போராட்



தேசிய, பிராந்திய நலன்களுக்கும் பாதகமாக அமையலாமெனப் பாரதம் எண்ணியது. இந்திய உப - சண்டம் எங்கும் பரவலாக எழுந்துள்ள தேசிய இன எழுச்சிகளையும், பிரிவினைக் கிளர்ச்சிகளையும், இந்திய அரசு காலம் காலமாய் நசுக்கி வருவது தெரிந்ததே. தென்னாசியாவின் பிராந்திய வல்லரசாகவும், இந்துமா சமுத்திர காவல்காரணமாகவும் தனதுமேலாண்மையை பலப்படுத்திவரும் பாரத அரசு இந்திய தேசிய இனப் போராட்டங்களைத் தனது உள்நாட்டு உறுதிக்கு ஆபத்தான அரசியல் புரட்சிகளெனத் தப்புக்கணக்குப் போட்டது. எமது விடுதலைப் போராட்டமும் இந்திய எல்லைக்கு அப்பால் அந்நிய பிரதேசத்தில் நிகழ்ந்தபோது அதன் புரட்சிகர அலைகள் இந்தியாவில் ஒடுக்கப்பட்டுவரும் தேசிய இனங்கள் மத்தியில் பரவிவிடலாமென பாரத அரசு பயந்தது. அத்துடன் தமிழீழ விடுதலைப் போர் தமிழ் நாட்டில் இனவுணர்வையும் தமிழ்த் தேசிய எழுச்சியையும் தூண்டிவிடலாமெனவும் கருதப்பட்டது. பாரகம் அடங்கிலும் எங்குமே வளர்ச்சி காணாதவாறு தமிழீழத்தில் ஆயுதப் போர்வடிவமும், போர் யுக்தி முறைகளும் முதிர்ச்சியும், முன்னேற்றமும் கண்டிருந்ததோடு. எமது சோசலிச புரட்சி சித்தாந்தமும் முதலாளித்துவ ஏகாதிபத்திய வல்லாண்மைக்கு எதிராக அமைக்கப்பட்டிருந்தமையும் இந்தியாவுக்கு அச்சத்தைக் கொடுத்தது. பரந்துபட்ட இந்திய வெகுசனங்களை

கை அரசை பலவீனப்படுத்தி இந்தியாவின் தங்கு நிலைக்கு கொண்டுவரும் நாசகாரத் திட்டத்தை இந்திய உளவு ஸ்தாபனமாகிய (RAW)வோ செயற்படுத்த தொடங்கியது. தமிழீழ மக்களின் ஆயுதப் போராட்டத்தை பலப்படுத்துவதாகக் கூறி பல்வேறு குழுக்களுக்கு பயிற்சியும் ஆயுதமும் வழங்கப்பட்டன. 'ஈழத் தமிழர் நலனில் உண்மையான அக்கறை இருந்தால், ஒழுங்கும் கட்டுப்பாடும் அற்ற பல்வேறு குழுக்கள் ஆயுதம் தரிப்பது ஆபத்தானது. இது தமிழீழத்தில் அராஜகத்தையும் ஆயுத மோதல்களையும் உண்டுபண்ணும் தமிழீழ மக்களின் உண்மையான போராட்ட சக்தியாகிய விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஒரு தேசிய விடுதலை இராணுவமாக வளர்ப்பதற்கு இந்திய அரசு உதவி செய்தால் தமிழரின் பாதுகாப்பை பலப்படுத்தமுடியும்" என்று எமது

களாக, எம்மையும் அழித்து, எமது மக்களின் விடுதலைப் போராட்டத்தையும் கொச்சைப்படுத்த முனைந்த எமது சகோதர இயக்கங்கள் ஒவ்வொன்றாக நிராயுதபாணிகள் ஆக்கப்பட்டன. தமிழீழத்தில் புலிகளின் இராணுவ - அரசியல் மேலாண்மை வலுத்தது. இந்திய அரசின் சூழ்ச்சிகரத்திட்டம் சுக்குநூறாகியது. பலம் வாய்ந்த ஒரே தேசிய இயக்கத்தின் கீழ் எமது விடுதலைப் போராட்டம் முனைப்புற்றது. இது ஒருபுறமிருக்க, தமிழீழம் மீது படையெடுத்த சிங்கள ஆயுதப்படைகளையும் எதிர்கொண்டு தாக்கி விடுதலைப் புலிகள் இயக்கம் மகத்தான இராணுவ சாதனைகளையும் ஈட்டியது. இந்த வரலாற்று சூழ்நிலையில், எட்டப்பர் படைகள் மூலம் எதனையும் சாதிக்க முடியாது எனக் கண்டு கொண்ட இந்திய அரசு தனது சொந்த இராணுவ பலத்தைக் கொண்டு புலிகளை அழித்துவிடத் தீர்மானித்தது. இந்த உள்நோக்கத்தின் அடிப்படையில்தான் ராஜீவ் - ஜெயவர்த்தனா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டதுமே சகல போர் ஆயுதங்களுடனும் இந்தியப்படைகள் தமிழீழ மண்ணில்

> ஒரு பிராந்திய வல்லாதிக்க பூதத்தை, தனித்து நின்று போராடி முழு உலகத்தையுமே திகைப்பிலாழ்த்திய மகத்தான ஒரு இராணுவ சாதனையை புலிகள் இயக்கம் படைத்தது. எமது இயக்கத்தின் இந்த ஒப்பற்ற இராணுவ வெற்றி தமிழீழ விடுதலைப் போராட்டப் பாதையில் மட்டுமன்றி தென்னாசியாவின் அரசியல் பூகோள சூழ்நிலைகளிலும் பாரியதாக்கங்களை விளைவிக்கும் என்பது திண்ணம்.

## ஊர்சுற்றி

எழுதுவது

"சில நேரங்களில் சில மனிதர்கள்" ஜெயகாந்தன் சில காலம் "நவசக்தி" என்ற பழைய பத்திரிகைக்கு உயிர் கொடுத்து தமிழ் நாட்டில் காங்கிரஸ் கட்சியை ஆட்சிக்குக் கொண்டு வரலாமென்று முயற்சித்தார்.

தமிழ் நாடு சட்டசபைத் தேர்தல் பிரசவம் உச்சத்திலிருந்த போது நவசக்தியும் தன்னாலான யுக்தியையெல்லாம் கையாண்டுபார்த்தது.

சட்டசபைத் தேர்தல் முடிந்து தி.மு. கழகம் ஆட்சிக்கு வந்ததும் நவசக்தியும் நின்று விட்டது ஊழியர்களுக்கு ஒரு மாதச் சம்பளம் இனும் கொடுக்க வேண்டுமென்று கேள்வி.

"என்ன உங்கள் பத்திரிகை இப்படி உயிர் விட்டுவிட்டதே என்று கேட்டால் ஜெயகாந்தனுக்குப் பொத்தொன்று கோபம் வருமாம்!

★ ★ ★

டி. ராஜேந்தர் தனிக் கட்சி துவங்கியவுடனேயே கட்சிக்காக 'சிலப்போசை' என்கிற பெயரில் ஒரு மாலைப் பத்திரிகை ஆரம்பிக்க முடிவு செய்தார் அதற்கு அனுமதி வழங்க செய்தித்தாள் பதிவாளர் அலுவலகத்துக்கு மனுச் செய்திருந்தார்.

விரைவில் அனுமதி வழங்க வேண்டுமென்று பதிவாளர் அலுவலகத்துக்குப்பல முறை வந்துபோனார்கள் அவர் உதவியாளர்கள் இதெல்லாம் பழநி தேர்தலுக்கு முன்பு இப்போது அந்தப் பெயரில் பத்திரிகை நடத்தும் அனுமதி ரெடி. ஆனால், ராஜேந்தர் தரப்பிலிருந்து அதைப் பெற்றுச் செல்ல யாருமே வரவில்லை. பழநி பாண்டித் தேர்தல்களில் அவர் கட்சி அடைந்த தோல்விக்குப் பின் பத்திரிகை நடத்துவதில்லை என்று முடிவு செய்துவிட்டாராம் டி ராஜேந்தர் இத்தகவலை ஜூனியர் போஸ்ட் வெளியிட்டுள்ளது.

பத்திரிகை நடத்துவது

இந்திய இராணுவம் இங்கிருந்து போகுமா போகாதா என்ற கேள்வியைவிட இந்திய இராணுவம் இங்கிருந்து போகக்கூடாது என்று ஏற்பாடு செய்த ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும் கூட்டங்களும் எடுபடாமல் போனதும் ஆச்சரியமல்ல.

இந்தக் கூட்டங்களுக்கும் ஆர்ப்பாட்டங்களுக்கும் ஏற்பாடு செய்தவர்கள் இந்திய இராணுவம் போவதற்கு முன்னரே தப்பியோடியதுதான் வேடிக்கை!

உலகின் நாலாவது பெரிய இராணுவத்தை, தென்னாசியப் பிராந்தியத்தின் வல்லாதிக்கத்தை விடுதலைப்புலிகள் எதிர்த்துப் போராடத் தொடங்கியபோது "இது மடத்தனம்; இந்தியாவை எதிர்த்து நிற்க முடியுமா?" என்று கேட்டவர்கள் பலப்பலர்.

"தலைவர் பிரபாகரனின் இரும்பு போன்ற இலட்சிய உறுதியும், தலைசிறந்த போர்முறைத்திட்டமும் ராஜதந்திர சாணக்கியமும் போராளிகளின் அற்புதமான தியாகங்களும் எமது இயக்கத்தின்மீது மக்களுக்குள்ள நம்பிக்கையுமே இந்தியப்படை எமது மண்ணிலிருந்து வெளியேறித் திரும்பிச் செல்வதற்குக் காரணமாகும்.

விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் இரத்தினச் சுருக்கமாகத் தந்த விளக்கம் இது.

இந்திய இராணுவம் இலங்கைக்கு வந்தது மட்டுமல்ல இது இங்கு வரவேண்டியேற்பட்டதற்கும் இஸ்ரேலிய நலன்காக்கும் பிரிவு இலங்கையில் திறக்கப்பட்டதற்கும் அடிப்படையான காரணங்களை தென்னிலங்கை அரசியல்வாதிகளும் பத்திரிகைகளும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மீண்டும் ஒரு அந்நியப்படை தமிழீழத்துக்குள் நுழைய முடியாது என்பது உண்மை. சிறிலங்காவுக்குள் நுழையாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அவர்கள் பொறுப்பு.

இந்திய இராணுவம் இலங்கை மண்ணிலிருந்து முற்றாகப் போய்விட்டது. ஆனால் அது பதித்து வைத்து விட்டுப்போன சுவடுகள் இன்னும் இருக்கின்றன.

அழிந்து சிதைந்துபோன கட்டிடங்கள், வீதிகள், வீடுகள், வயல்கள், தோட்டங்கள், தொழிற்சாலைகள், கல்விக்கூடங்கள், வழிபாட்டுத் தலங்கள் ஆகியவை சீராக்கப்பட வேண்டும்.

நலிந்துபோன பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும். போர்க்கால அடிப்படையில் திட்டமிட்டுக் கடினமாக உழைத்தாலே மீண்டும் தமிழ்ச் சமுதாயம் தலைதூக்க முடியும்.

இது மட்டுமல்ல 1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்திலிருந்து இந்தியப்படை இங்கிருந்து வெளியேறிப் போகும்வரை ஏற்பட்ட அழிவுகள், நஷ்டங்கள் கணக்கெடுக்கப்பட வேண்டும். இந்தியப்படையின் தாக்குதல்களினால் உயிரிழந்தோரின் பட்டியலும்; ஊனமுற்றோரின் பட்டியலும் விபரமாகத் தயாரிக்கப்பட வேண்டும்.

இழப்புக்களுக்கு ஈடுகேட்கும் உரிமை எமக்கிருக்கிறது.

---

...வின் அரசியல் பூகோள சூழ்நிலைகளிலும் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தும் என்பது திண்ணம்.

தமிழீழ மக்களின் தேசிய சுதந்திரப்போராட்டம் தனது நீண்ட வரலாற்றுப் பாதையில் பலவடிவங்களை எடுத்து, பல திருப்பங்களை அடைந்து, பல நெருக்கடிகளைச் சந்தித்து, தனக்கே உரித்தான தனித்துவத்துடன் முன்னேற்றம் கண்டு வருகிறது. இந்த வரலாற்றுப் பரிணாமத்தில் இந்திய - புலிகள் போரும் ஒரு இணைபிரியாத அங்கமாக, தவிர்க்க முடியாத ஒரு கட்டமாக, உயர்நிலை எய்திய போராட்ட வடிவமாக அமையப் பெற்றது என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். இதன் அடிப்படையில் இந்திய - புலிகள் போரின் சிக்கலான பரிமாணங்களையும், எமது விடுதலைப் போராட்டத்தில் அது ஏற்படுத்தியுள்ள புதிய வரலாற்றுத் திருப்பங்களையும் இங்கு பார்ப்போம்.

விடுதலைப் புலிகளின் தலைமையில் தமிழீழதேசிய விடுதலைப் போராட்டம் முனைப்புற்று முன்னேற்றம் கண்டு வந்த காலகட்டத்தில் இந்திய அரசு நேரடியாகத் தலையிட்டது. இந்திய அரசின் தேசிய, பிராந்தியக் கொள்கையின் அடிப்படையில் இந்தத் தலையீடு தவிர்க்கமுடியாததாகும். தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்திற்குச் சாவு மணி அடித்து விடுவதே இந்தத் தலையீட்டின் பிரதான நோக்கமாக அமைந்தது.

தமிழீழ விடுதலைப் போராட்டம் இந்தியாவின் ஏனைய பிராந்தியங்களிலும் தேசிய இனங்கள் மத்தியில் பரவிவிடலாமென பாரத அரசு பயந்தது. அத்துடன் தமிழீழ விடுதலைப் போர் தமிழ் நாட்டில் இனவுணர்வையும் தமிழ்த் தேசிய எழுச்சியையும் தூண்டிவிடலாமெனவும் கருதப்பட்டது. பாரகம் அடங்கிலும் எங்குமே வளர்ச்சி காணாதவாறு தமிழீழத்தில் ஆயுதப் போர்வடிவமும், போர் யுக்தி முறைகளும் முதிர்ச்சியும், முன்னேற்றமும் கண்டிருந்ததோடு, எமது சோசலிச புரட்சி சித்தாந்தமும் முதலாளித்துவ ஏகாதிபத்திய வல்லாண்மைக்கு எதிராக அமைக்கப்பட்டிருந்தமையும் இந்தியாவுக்கு அச்சத்தைக் கொடுத்தது. பரந்துபட்ட இந்திய வெகுசனங்களை மூடநம்பிக்கைச் சிறைக்குள் பூட்டிவைத்து ஆட்சி நடத்தி வந்த இந்திய ஆளும்வர்க்கம், தமிழீழத்தில் வித்திட்டு வளர்ந்த புதுமையான எழுச்சிப்போர் வடிவத்தை கருவ முன்பே களைந்தெறிய முடிவு செய்தது.

தமிழீழப் போராட்டத்திற்கு முதன்மையான எதிரியாக இந்திய அரசு செயற்பட்டது. தமிழீழ தனியரசு அமைவதை தடுத்து நிறுத்தி, இலங்கையின் பிராந்திய ஒருமைப்பாட்டைப் பலப்படுத்தி முழு இலங்கையையும் தனது வல்லாதிக்கத்தின் கீழ் கொண்டுவந்து, தனது பிராந்திய அபிலாசையை பூர்த்தி செய்ய இந்தியா விரும்பியது. இலங்கையை தங்குநிலைக்கு ஆளாக்கி திருமலைத் துறைமுகத்தை தனது சட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்து இந்து மாசமுத்திரத்தின்தென்பிராந்தியத்தில் தனது கடலாதிக்கத்தை விரிவுபடுத்துவதே இந்தப்பிராந்திய அபிலாசையாகும். இந்தியாவின் இந்தப் பூகோள அரசியல் கேந்திர திட்டத்தை செம்மையாக செயற்படுத்துவதாயின் தமிழர் நலன்களைத் தாரை வார்த்து விட்டு இலங்கை அரசை நண்பனாகவும் அதே வேளைஅடிமையாகவும் வைத்திருப்பதே சாலச்சிறந்ததென டில்லி ஆட்சியாளர் கருதினர். இந்த சூழ்ச்சிகரத்திட்டத்தின் அடிப்படையில்தான் இந்திய இலங்கை ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

இந்த ஒப்பந்தத்திற்கான பூர்வாங்க வேலைகள் 1983 ஆடியிலிருந்து ஆரம்பமாகின. தமிழீழ மக்களின் சுதந்திரப் போராட்டத்தை ஒரு புறம் சீர்குலைத்து, மறுபுறம் இலங்கை தமிழீழ மக்களின் ஆயுதப் போராட்டத்தை பலப்படுத்துவதாகக் கூறி பல்வேறு குழுக்களுக்கு பயிற்சியும் ஆயுதமும் வழங்கப்பட்டன. 'ஈழத் தமிழர் நலனில் உண்மையான அக்கறை இருந்தால், ஒழுங்கும் கட்டுப்பாடும் அற்ற பல்வேறு குழுக்கள் ஆயுதம் தரிப்பது ஆபத்தானது. இது தமிழீழத்தில் அராஜகத்தையும் ஆயுத மோதல்களையும் உண்டுபண்ணும் தமிழீழ மக்களின் உண்மையான போராட்ட சக்தியாகிய விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஒரு தேசிய விடுதலை இராணுவமாக வளர்ப்பதற்கு இந்திய அரசு உதவி செய்தால் தமிழரின் பாதுகாப்பை பலப்படுத்தமுடியும்'' என்று எமது தலைவர் பிரபாகரன் டில்லிக்கு அடிக்கடி விடுத்த கோரிக்கைகளை இந்தியஅரசு நிராகரித்து வந்தது. ஏனைய அமைப்புகளுக்கு இந்திய அரசு வழங்கிய இராணுவப் பயிற்சித்திட்டம் தமிழீழத்தில் புலிகளின் இராணுவ வல்லாதிக்கத்தை ஏனைய ஆயுதக் குழுக்கள் மூலம் சமநிலைப் படுத்தி, இறுதியில் புலிகள் இயக்கத்தை நிர்மூலம் செய்யும் சூழ்ச்சிகர நோக்கத்தைக் கொண்டதென்பதை எமது தலைமைப்பீடம் உணர்ந்து கொண்டது. புலிகள் தலைமையில் ஆயுதப் போர்வடிவாக உருவம் பெற்ற தமிழர் சுதந்திரப் போராட்டத்தை கட்டி வளர்ப்பது இந்திய அரசின் நோக்கமல்ல மாறாக விடுதலைப்போராட்டத்தைத் திசை திருப்பி சீர்குலைத்து விடுவது ஒரு புறமிருக்க மறுபுறத்தில் இலங்கை அரசுக்கு இராணுவ அழுத்தம் கொடுத்து இலங்கையை தனது ஏகாதிபத்திய வல்லாண்மையின் கீழ் கொண்டு வருவதே இந்தியாவின் திட்டமாக இருந்தது. இந்த திட்டத்தை செயற்படுத்துவதாயின் தனது அதிகாரத்திற்குப் பணிந்து செயல்படும் கூலிப் பட்டாளங்களே இந்தியாவுக்கு தேவைப்பட்டது. இந்தக் கூலிப்பட்டாளங்கள் மூலம் விடுதலை இலட்சியத்தல் உறுதியாக நின்ற புலிகளை அழித்து விடலாமென இந்திய அரசு எண்ணியது. இந்தியாவின் சூத்திரதார சகுரங்க காய் நகர்த்தல்களை புரிந்துகொண்ட எமது தலைவர் விவேகமாகவும் சாதுரியமாகவும் இந்தியாவின் சவாலை எதிர்கொண்டார். இந்திய அரசின் ஏவல்நாய் ... எமது விடுதலைப் போராட்டம் முனைப்புற்றது. இது ஒருபுறமிருக்க, தமிழீழம் மீது படையெடுத்த சிங்கள ஆயுதப்படைகளையும் எதிர்கொண்டு தாக்கி விடுதலைப் புலிகள் இயக்கம் மகத்தான இராணுவ சாதனைகளையும் ஈட்டியது. இந்த வரலாற்று சூழ்நிலையில், எட்டப்பர் படைகள் மூலம் எதனையும் சாதிக்க முடியாது எனக் கண்டு கொண்ட இந்திய அரசு தனது சொந்த இராணுவ பலத்தைக் கொண்டு புலிகளை அழித்துவிடத் தீர்மானித்தது. இந்த உள்நோக்கத்தின் அடிப்படையில்தான் ராஜீவ் - ஜெயவர்த்தனா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டதுமே சகல போர் ஆயுதங்களுடனும் இந்தியப்படைகள் தமிழீழ மண்ணில் காலடி வைத்தன.

இந்தியாவுடன் பகைத்திருக்கத் தேவையில்லை, இந்திய இராணுவத்துடன் போரை தவிர்த்திருக்கலாம் என்று சிலர் இன்னும் வாதாடி வருகிறார்கள். இந்திய ஏகாதிபத்தியத்தின் தந்திரோபாயங்களையும் அதன் மனிதாபிமானமற்ற கொடூரத் தன்மையையும் புரிந்து கொள்ள முடியாத பாரத தாசர்களே இன்றும் இவ்விதம் கருதி வருகிறார்கள். பழைய தலைமைகளின் கொத்தடிமைப் போக்கும், தன்னம்பிக்கை இல்லாது அந்நிய சக்திகளின் தலையீட்டை விரும்பிய காலனித்துவ மனப்பான்மையும் இந்த இந்திய சார்பு நிலைக்கு அடிப்படையாக அமைந்தது எனலாம்.

(தொடரும்)

**இக் கட்டுரை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவு வெளியீட்டு வாரி த்தால் வெளியிடப்பட்டது.**

---

விரைவில் அனுமதி வழங்க வேண்டுமென்று பதிவாளர் அலுவலகத்துக்குப்பல முறை வந்துபோனார்கள் அவர் உதவியாளர்கள் இதெல்லாம் பழநி தேர்தலுச்கு முன்பு இப்போது அந்தப் பெயரில் பத்திரிகை நடத்தம் அனுமதி ரெடி. ஆனால், ராஜேந்தர் தரப்பிலிருந்து அதைப் பெற்றுச் செல்ல யாருமே வரவில்லை. பழநி பாண்டித் தேர்தல்களில் அவர் கட்சி அடைந்த தோல்விக்குப் பின் பத்திரிகை நடத்துவதில்லை என்று முடிவு செய்துவிட்டாராம் டி ராஜேந்தர் இத்தகவலை ஜூனியர் போஸ்ட் வெளியிட்டுள்ளது.

பத்திரிகை நடத்துவது என்பது சுலபமல்ல!

---

## புதிய அதிபராக நியமனம்

(அம்பாறை மாவட்ட நிருபர்)

பாண்டிருப்பு இந்து மகா வித்தியாலயத்தின் புதிய அதிபராக பாண்டிருப்புக் கிராமத்தைச் சேர்ந்த பிரபல இலக்கிய கர்த்தாவும். விமர்சகரும் விஞ்ஞானப் பட்டதாரியுமான திரு.சண்முகம் சிவலிங்கப் (சசி) நியமிக்சப்பட்டுள்ளார்.

இவரது நியமனம் குறித்து இங்குள்ள கல்விமான்களும், பெற்றோர்களும், மாணவர்களும் பெருமிதமடைந்துள்ளனர். (48)

---

## சட்டவிரோத மது விற்பனைக்கு தடை

(புங்குடுதீவு)

வேலணை தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனைச் சங்கத்தின் விழிப்புக் குழுவினால் சட்ட விரோத கள், சாராய விற்பனை தடை செய்ய பட்டுள்ளது.

சட்ட விரோத கள் விற்பனை செய்யும் போது பிடிக்கப்பட்டால் ஒரு போத்தலுக்கு 100 ரூபாவீதம் குற்றப் பணம் அறவிடப்படும் எனவும் காலை, மாலை ஒழுங்காக தவறணைக்கு கள் கொடுக்கப் பட வேண்டும் எனவும் இச் சங்கத்தின் உப குழு தீர்மானித்துள்து.

இது சம்மந்தமாக தீவுப்பகுதி தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிப் பொறுப்பாளரிடம மகஜர் ஒன்று அண்மையில் கொடுக்கப்பட்டதாக அச்சங்கத்தின் தலைவர் திரு. இராயப்பு தெரிவித்தார். (22)

---

## உணவுற்பத்திக் குழு இயங்கும்

(வண்ணார்பண்ணை)

கடந்த இரு வருடங்களாக இயங்காமல் இருந்த தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வண்ணார்பண்ணை உணவு உற்பத்திக் குழு தற்போது இயங்க ஆரம்பித்துள்ளது. இக்குழு நல்லூர் கமநல சேவை நிலையத்தினதும் விவசாய விரிவாக்க நிலையத்தினதும் ஆலோசனைகளைப் பெற்று வருகின்றது. நெற் செய்கையாளர்கள் வீட்டுத் தோட்டச் செய்கையாளர்களைக் கொண்ட இக் குழுவினன் வருடாந்தக் கூட்டம் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ளது.

ஈழநாதம்

## நேர்முகப் பரீட்சைகள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

அரசாங்க நியமனங்கள் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டதையடுத்து பல நேர்முகப்பரீட்சைகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

வங்கிகள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் பல திணைக்களங்களில் நடைபெற இருந்த இந்த நேர்முகப் பரீட்சைகளும் மறு அறிவித்தல்வரை ஒத்தி வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

நேர்முகப்பரீட்சைக்கு வரும்படி அனுப்பும் கடிதங்கள் இனிமேல் விண்ணப்பதாரியின் தகமைகள் என்பவற்றைக் கொண்டே அனுப்பப்படவுள்ளதாகவும், நேர்முகப்பரீட்சைக்கு தெரிவு செய்யும் போதே விண்ணப்பங்கள் சரியாக பரிசீலிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

# ஈராண்டு போருக்குப் பின் இந்தியப் படை கடைசி அணி புறப்பட்ட காட்சி

(நமது சிறப்பு நிருபர் ஈ. ஆர். தி.)

திருக்கோணமலையிலிருந்து சனி காலை 9-50 மணியளவில் இந்தியப்படை முற்றாக வெளியேறியது. இலங்கையில் தமிழ்பேசும் மக்கள் வாழும் மாகாணங்களான வடக்கிலும் கிழக்கிலும் முகாமிட்டிருந்த இந்திய இராணுவப் படைப் பிரிவின் கடைசி அணிகளின் வெளியேற்றத்துடன் ஒரு சகாப்தம் போய் புதியதொரு சகாப்தம் உருவாகிறது. இலங்கையின் வரலாற்றில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தருக்குப் பிறகு, ஒரு குடியேற்ற ஆட்சியை இங்கிலாந்து இலங்கையில் அமைத்தது. ஆங்கிலேயர் இலங்கையை விட்டுப்போன பிறகும், திருக்கோணமலையில் சீனன்குடாவில் ஆங்கில நாட்டுப்படைப் பிரிவு ஒன்று நிலை கொண்டிருந்தது. இந்த சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யத்தில் யூனியன் ஜாக்கொடி கம்பத்திலிருந்து இறங்கியதும் சீனன்குடாப் பகுதியில் தான். அவர்களுக்குப் பிறகு இலங்கைக்கு வந்த வெளிநாட்டுப் படையென்ற வகையில் இந்தியப் படையும் கடைசியாகத் திருக்கோணமலையில் சீனன் குடா எண்ணெய்க்குத இறங்குதுறையிலிருந்துசென்ற சனிகாலை 24ஆம் திகதி 9-50 அளவில் வெளியேறியது.

### பிரியாவிடை வைபவம்

இலங்கையின் வரலாற்றையும், அரசியலையும் ஒட்டிய, இந்த இந்திய இராணுவ வெளியேற்றம் தொடர்பான பிரியாவிடை வைபவத்தில் கலந்துகொள்ள பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா இராணுவச் சேனாதிபதி லெப்டினன் ஜெனரல் வனசிங்க, கடற்படைத் தளபதி எஸ்.ஏ.ஏ. சில்வா விமானப்படைத் தளபதி லாறன்ஸ் குணவர்த்தனா, இராணுவத் தளபதி வால்டர் பெர்னான்டோ, முன்னாள் பாதுகாப்புச் செயலாளரும், இன்று இங்கிலாந்துக்கான இலங்கையின் உயர் ஸ்தானிகரான செபால ஆட்டிகல, மற்றும் அதிகாரிகள் புடைசூழ விசேட விமானத்தில் வந்திறங்கினார். இந்தியத் தூதுவர் மெஹ்ரோத்ராவும் தமது அதிகாரிகள் சகிதம் விழாவில் கலந்துகொண்டார்.

பாதுகாப்பு அமைச்சரின் செயலாளர் சிறில் ரணதுங்கா, ஒருநாள் முன்னதாகவே பிரியாவிடை வைபவ நிகழ்ச்சிகளை நெறிப்படுத்துவதற்காக திருக்கோணமலை வந்திருந்தார்.

வடக்கு-கிழக்கு மாகாண சபை ஆளுநர் நளின் செனிவரெத்ன, மற்றும் திருக்கோணமலையிலுள்ள திணைக்களங்களின் உயர் அதிகாரிகளும் பிரியாவிடை வைபவத்தில் கலந்து கொண்டனர்.

இந்திய இராணுவம் வெளியேறுவதை இலங்கையில் இந்திய அமைதிகாக்கும் படையின் தளபதி லெப்டினன் ஜெனரல் ஏ. எஸ். கல்கத் மேற்பார்வை செய்தார். இந்திய தென்பிராந்திய இராணுவத் தளபதியும், கடல் கடந்த படைகள் (O. F. C.) தளபதியுமான ஏ. கே. சட்டர்ஜியும் சீனன்குடாவில் இந்தியப் படைகள் பயணமாகும் போது சமூகமளித்திருந்தார்.

நிகழ்ச்சிநிரலின்படி காலை 9 மணியளவில் பிரியாவிடை வைபவம் தொடங்கியது. இந்தியா இலங்கை இருதரப்புப் படையினரும் வியூகம் வகுத்து அணிவகுத்து நிற்க, சீக்கியர் லயிட் இன்பன்ரறி பான்ட் வாத்தியக் கோஷ்டி வாத்தியம் முழங்கியது. தொடர்ந்தாற்போல் இலங்கை கப்பற்படை பான்ட் வாத்தியக் கோஷ்டி பிரியாவிடைக் கீதம் வாசித்தது. இதேவேளை இருதரப்புப் பிரமுகர்களும் ஒருவருக்கொருவர் குசலம் விசாரிப்பதும் கைலாகு கொடுப்பதுமாக இருந்தனர். வழியனுப்பவந்தவர்களையும், பிரியாவிடை பெறும் உயர் அதிகாரிகளையும் 'பத்திரிகையாளர் படை' சூழ்ந்து கொண்டது.

### கௌரவத்துடன் போகிறோம்

இதேவேளை, இறங்குதுறையில் நின்ற இந்தியப்படையின் தென்பிராந்தியத் தளபதி ஏ. கே. சட்டர்ஜியிடம் ஈழநாதம் விசேட நிருபர், ''இப்படை விலகல் பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?'' என்று வினாவியபோது, கஸ்டமான சூழ்நிலையில் இலங்கையில் செயற்பட்ட சிப்பாய்கள் வீடு திரும்புவதையிட்டுச் சந்தோஷமடைகிறார்கள் நாம் கௌரவத்துடன் வந்தோம்; கௌரவத்துடன் போகிறோம், கஸ்டமான சூழ்நிலையில் நேர்மையாகவும் கௌரவத்தோடும் செயற்பட்டார்கள் என்றார்.

மொத்தம் ஆறு (6) இந்தியக்கப்பல்கள் கடலில் நங்கூரமிட்டு நின்றன. நாலு கப்பல்கள் இந்தியக் கடற்படைக்குச் சொந்தமானவை ஒரு கப்பலில் இராணுவ உபகரணங்களும், கனரக இயந்திரங்களும் ஏற்றப்பட்ட நிலையில் இலேசாகக் கண்ணுக்கெட்டிய தூரத்தில் நின்றன. இக் கப்

மிக இக்கட்டான சூழ்நிலையிலும் இராணுவம் தமது கடமையைச் செய்துள்ளது. எமது இராணுவ அதிகாரிகளும், சிப்பாய்களும் எமது அன்டையிலுள்ள நேசநாடான இலங்கைக்காக உயர்த்தியாகம் செய்துள்ளார்கள். அவர்களையிட்டு நாம் பெருமைப் படுகிறோம். இரு நாடுகளுக்கு மிடையிலான நட்புறவு நீண்டகாலம் நீடிக்க வேண்டும் என்றார்.

### தலைவர்களுக்கு புரிந்துணர்வு வேண்டும்

இவ்வாறு மெஹ்ரோத்ரா பேசிய பின்னர், பாதுகாப்பு ராசாங்க அமைச்சரும் வெளிவிவகார அமைச்சருமான ரஞ்சன் விஜேரத்தின பேசுகையில் தெரிவித்ததாவது.

போராளிக் குழுக்களிடமிருந்த ஆயுதங்களைச் களைய இந்திய அமைதிப்படை இலங்கைக்கு வந்தது. வந்தவர்கள் இரண்டு வருடங்களுக்கு மேலாக இங்கு தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது நீங்கள் பல தியாகங்களையும் செய்துள்ளீர்கள். இது இரு நாடுகளையும் பொறுத்த வரையிலும் ஓர் துர்ப்பாக்கிய நிலையாகும்

அவர் தொடர்ந்து பேசுகையில் வி. பி சிங்கும், குஜ்ராலும் தங்கள் வாக்குறுதியைக் காப்பாற்றி விட்டார்கள், காலக் கெடுவுக்கு முன்னதாகவே படைகளை மீள அழைத்து விட்டார்கள். நாம் நட்புறவு நாடுகள். எமது உறவுநாளும் பொதுளும்வளர்ந்து, பொருளாதார ஒத்துழைப்பு நடவடிக்கைளினால் எமது நாடு பயனடையும் ஐரோப்பிய நாடுகள் பொது நன்மை கருதி ஒத்துழைக்கின்றன. இந்த ஒத்துழைப்பை நாம் ஐரோப்பிய நாடுகளிடமிருந்து தெரிந்து கொள்ள வேண்டும். தென்கிழக்கு ஆசியாவில் உள்ளவர்கள் ஒற்றுமையாக வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.

தலைவர்கள் புரிந்துணர்வுடன் நடந்து கொண்டால் மக்களும் அவர்களைப் பின்பற்றுவார்கள் என்றும், எமக்காகத் தமது உயிரைத் தியாகம் செய்த இந்திய இராணுவத்தினரை தன்னால் மறக்க முடியாதென்றும் ரஞ்சன் விஜேரத்தின தெரிவித்தார்.

9-50 அளவில் மாக்கர் என்ற கப்பல் நகரத் தொடங்கியது. இலங்கைக் கப்பற்படை பான்ட் வாத்தியக் கோஷ்டியினர் இலங்கை தேசிய கீதத்தையும், இந்திய தேசிய கீதத்தையும் மாறி மாறி இசைத்தனர். கடைசியாக ஜெனரல் கல்கத் இலங்கை மண்ணிலிருந்து பிரியாவிடை பெற்றுக்கொண்டார்.

### கடைகளில் கொள்ளையடித்தோர் மக்களால் பிடிக்கப்பட்டனர்

(வேலணை)

டெடுத்துள்ளனர் எனவும்

### தமது குடும்பம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மான பெண்கள் தம் கற்பைப் பறிகொடுத்துள்ளனர்.

புரட்சி என்பது வாய்ச் சொல்லில் ஏற்படுவதில்லை, செயலினால் ஏற்படுவது. இந்த விதத்தில் அன்னையின் தியாகத்தை நாம் அனைவரும் மதித்து அவரின் தியாகத்தை உலகிற்கு வெளிப்படுத்த வேண்டும்.

ஐந்து குழந்தைகளை வளர்க்க வேண்டிய பொறுப்பிலிருந்து விலகி, எமது இயக்

### அந்நிய படை.....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பி வடக்குகிழக்கில்குழப்பங்களை ஏற்படுத்தியது என்றும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

தொடர்ந்து பேசிய அவர் இந்தியப்படை வருகையால் ஜே.வி. பியின் நடவடிக்கைக்கு உட்பட்டு அப்பாவி மக்கள் செயற்பட்டனர். பலர் கொல்லப்பட்டனர்.

இந்தியப்படையுடனான போராட்டத்தில் சுமார் ஆயி

### வி. பி. சிங்.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்

இந்தியாவுக்கும், இலங்கைக்குமுள்ள நீண்டகால வரலாற்றையெடுத்துக் கூறிய ஜனாதிபதி பிரேமதாஸா சமீபகாலத்தில் இரு நாடுகளுக்குமிடையிலான உறவில் சிறிது விரிசலேற்படக் கூடிய நிலை ஏற்பட்டாலும் வி. பி. சிங் அரசு நட்புறவைப் பாதிக்காதவகையில் நடந்து கொண்டது என்றும் கூறினார். இருநாடுகளுக்கிடையில் எஞ்சியுள்ள பிரச்சினைகளையும் பேச்சுவார்த்தைமூலம் தீர்த்துக்கொள்ள முடியுமென்றும் ஜனாதிபதி பிரேமதாஸா நம்பிக்கை தெரிவித்தார்.

### சிறுபான்மை...

(1ஆம்பக்கத் தொடர்ச்சி)

ர்க்க முடியாது போய்விடும் என ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா பண்டாரகமவில் இடம் பெற்ற ஒன்பதாவது மகாபொல கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும்போது தெரிவித்தார்.

பண்டாரகமவில்நடந்த இக் கூட்டத்தில் 3500 மாணவர்களுக்கும் புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டன. இவ்விழாவில் வடக்குகிழக்கு பல்கலைக் கழகங்களில் இருந்தும் மாணவர்கள் சென்றமை குறிப்பிடத்தக்கது.

### மாகாண அமைச்சுகளுக்கு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கது. இம்மகாநாட்டில் அரசாங்கத் தரப்பில் உயர் கல்வி அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீட் வடக்கு-கிழக்கு மாகாணசபை ஆளுநர் நளின் செனிவரெட்னா, பாதுகாப்புச் செயலாளர், ஐ ஜி பி, ஆகியோரும் விடுதலைப் புலிகள் அமைப்பின் சார்பில் அன்ரன் பாலசிங்கம், யோகி, திருமதி அன்ர பாலசிங்கம், கிழக்கு மாகாண விடுதலைப்புலிகள் அரசியற் பொறுப்பாளர் பூபனும் இராணுவப் பொறுப்பாளர் பதுமனும் கலந்து கொண்டார்கள்.

பிறெட்டறிக் கோட்டைக் கச்சேரியில் வேலை செய்யும் ஊழியர் தொடர்பான கேள்விக்குப் பதிலளிக்கையில்,

### அடுத்த கட்டப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் இப் பேச்சுவார்த்தையின்போது முன்னைய பேச்சுவார்த்தைகளின் போது வலியுறுத்தப்பட்ட முழுமையாக நிறைவேற்றப்படாத அம்சங்கள் பற்றியும் வலியுறுத்தப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது. குறிப்பாக பாடசாலைகளிலும் அரச கட்டிடங்களிலும் நிலைகொண்டிருக்கும் இலங்கை இராணுவ முகாம்களை மூடுவது தொடர்பாகப் பேசப்படலாம் எனவும் தெரியவருகின்றது. முன்னைய பேச்சுவார்த்தையின் பயனாக இலங்கை இராணுவத்தினர் கரடியனாறு புல்லுமலை முகாம்களை மூடியுள்ளபோதும் இது விடுதலைப் புலிகளுக்கு திருப்தி தருவதாக இல்லை.

### பார்சலில்....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்பிரதேசத்தைவிட்டு இந்திய இராணுவம் கடந்த மாதங்களில் வெளியேறியதைத் தொடர்ந்து முதன்முதல் அப்பிரதேசத்தில் மீன் பிடிக்கச் சென்ற பூபாலசிங்கம் 15 தொடக்கம் 20 வரையான பார்சல்கள் ஓரிடத்தில் கிடப்பதைக் கண்டு அவற்றுளொன்றையெடுத்துப் பிரிக்க முயன்ற போது அப்பார்சலுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததைத் தொடர்ந்து அவர் படுகாயத்துக்குள்ளானார். (லோ)

### கொழும்பில்....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டனர். ஆர்மர் வீதியில் இருவர் ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்தே இந்த ஏழு பேரும் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

டால் அது பகிர்ந்தளிக்கப் படும் என்றார். இதுவரை ரூபா 70 லட்சம் வந்திருக்கிறது. அதை நாம் உடனடியாகப் பகிர்ந்தளிக்க யோசிக்கிறோம் என்றார். திருக்கோணமலையில் பழுதடைந்த பஸ்களுக்கு உதிரிப்பாகங்கள் வாங்குவதற்கு முதற் கட்டப் பணமாக ரூபா 3 லட்சம் வருகிறது. தேவையான மிகுதிப் பணமும் விரைவில் வரும் என்றார்.

முன்னாள் முதலமைச்சர் பெருமாளை உங்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். அவர் தொடர்பான உங்கள் மதிப்பீடு என்ன? அவர் நல்ல மனிதர். கெட்டித்தனமானவர். யாரோ தூண்டி விட்டதால், அவர் கட்சியின் முடிவுப்படி தன்னிச்சையாகச் சுதந்திர ஈழம் பிரகடனப்படுத்தியிருக்க

...நாடுப் படையென்ற வகையில் இந்தியப் படையும் கடைசியாகத் திருக்கோணமலையில் சினன் குடா எண்ணெய்க்குத இறங்குதுறையிலிருந்துசென்ற சனிக்கிழமை 24ஆம் திகதி 9-50 அளவில் வெளியேறியது.

### பிரியாவிடை வைபவம்

இலங்கையின் வரலாற்றையும், அரசியலையும் ஒட்டிய, இந்த இந்திய இராணுவ வெளியேற்றம் தொடர்பான பிரியாவிடை வைபவத்தில் கலந்துகொள்ளும் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா இராணுவச் சேனாதிபதி லெப்டினன் ...களின் உயர் அதிகாரிகளும் பிரியாவிடை வைபவத்தில் கலந்து கொண்டனர்.

இந்திய இராணுவம் வெளியேறுவதை இலங்கையில் இந்திய அமைதிகாக்கும் படையின் தளபதி லெப்டினன் ஜெனரல் ஏ. ஏ. எஸ் கல்கத் மேற்பார்வை செய்தார். இந்திய தென்பிராந்திய இராணுவத் தளபதியும், கடல் கடந்த படைகள் (O. F. C.) தளபதியுமான ஏ. கே. சட்டர்ஜியும் சினன்குடாவில் இந்தியப் படைகள் பயணமாகும் போது சமுகமளித்திருந்தார்.

நிகழ்ச்சி நிரலின்படி காலை 9 மணியளவில் பிரியாவிடை ... தென்பிராந்தியத் தளபதி ஏ. கே. சட்டர்ஜியிடம் ஈழநாதம் விசேட நிருபர், ''இப்படைவிலகல் பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?'' என்று வினாவியபோது, கஸ்டமான சூழ்நிலையில் இலங்கையில் செயற்பட்ட சிப்பாய்கள் வீடு திரும்புவதையிட்டுச் சந்தோஷமடைகிறார்கள் நாம் கௌரவத்துடன் வந்தோம்; கௌரவத்துடன் போகிறோம், கஸ்டமான சூழ்நிலையில் நேர்மையாகவும் கௌர்வத்தோடும் செயற்பட்டார்கள் என்றார்.

மொத்தம் ஆறு (6) இந்தியக்கப்பல்கள் கடலில் நங்கூரமிட்டு நின்றன. நாலு கப்பல்கள் இந்தியக் கடற்படைக்குச் சொந்தமானவை ஒரு கப்பலில் இராணுவ உபகரணங்களும், கனரக இயந்திரங்களும் ஏற்றப்பட்ட நிலையில் இலேசாகக் கண்ணுக்கெட்டிய தூரத்தில் நின்றன. இக் கப்பல்களில் ஒன்றான மார்கர் என்ற 4000 தொன் எடையுள்ள கப்பலில் இந்தியச் சிப்பாய்கள் ஒழுங்கு வரிசையாக வழியனுப்பிவைக்க வந்தவர்களைப் பார்த்தபடி நின்றனர் ஹிந்தியில் மார்கா என்பது தமிழில் முதளை என்றுஅழைப்பார்களாம். கப்பலில் இருந்த பயணிகள் (சிப்பாய்கள்) முதலைக்கண்ணீர் வடிக்கவில்லை அவர்கள் தமது இருப்பிடங்களுக்குத் திரும்புவது குறித்து ஆனந்தக்கண்ணீர் விட்டனர்.

### இந்திய இராணுவத்தின் இழப்புகள்

அமைதிப்படைத் தளபதி கல்கத்தை ஈழநாதம் விசேட நிருபர் அணுகிப் பேசியபோது இதுவரை-அதாவது 1987 ஒக்டோபர் 10முதல் இன்றுவரை, இலங்கையில் இந்திய அமைதிப்படைகளின் நடவடிக்கைகளின்போது 2987 பேர் காயமுற்றதாகவும், 1555 பேர் கொல்லப்பட்டதாகவும், இரண்டுபேரைக் காணவில்லை என்றும் தெரிவித்தார்.

இலங்கை விமானப் படைத் தளபதி ஏயார் மார்ஷல் ரெறன்ஸ் பெர்னான்டோ பின்வருமாறு தெரித்கார்.

அவர்கள் (இந்தியர்) தங்களுடைய கடைமையைச் செய்துள்ளார்கள். மிக்க கஸ்டமான சூழலில் தமது நோக்கத்தைப் பெரிதளவு நிறைவேற்றியுள்ளார்கள்.

### நட்புறவு நீடிக்கவேண்டும்

இவ் வைபவத்தில், 32மாதங்களாக இலங்கையில் நிலைக்கொண்டிருந்த இராணுவத்தில் மிச்ச சொச்சமான 2000 சிப்பாய்கள் மார்க்கர் என்ற கப்பலில் பிரயாணத்துக்கு தயார் நிலையில் நின்றனர். இதே வேளை இந்தியா ஸ்தானிகர் மெஹ்ரோத்ரா மார்கர் என்ற கப்பின் தட்டிலிருந்து உரை நிகழ்த்துகையில் இலங்கையின் ஒருமைப்பாட்டையும் ஐக்கியத்தையும் நிலைநாட்டவே இந்தியப்படை இலங்கைக்கு வந்தது இரண்டு வருடங்களுக்கு மேலாக இங்கு தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது நீங்கள் பல தியாகங்களையும் செய்துள்ளீர்கள். இது இரு நாடுகளையும் பொறுத்த வரையிலும் ஓர் துர்ப்பாக்கிய நிலையாகும்

கோஷ்டியினர் இலங்கை தேசிய கீதத்தையும், இந்திய தேசிய கீதத்தையும் மாறி மாறி இசைத்தனர். கடைசியாக ஜெனரல் கல்கத் இலங்கை மண்ணிலிருந்து பிரியாவிடை பெற்றுக்கொண்டார்.

## கடைகளில் கொள்ளையடித்தோர் மக்களால் பிடிக்கப்பட்டனர்

(வேலணை)

நயினாதீவில் உள்ள பல கடைகளிலும், கூட்டுறவுச் சங்கத்தின் கிளையொன்றிலும் திருட்டுச் செயலில் ஈடுபட்டதாக கூறப்படும் (03) பேர்களை பொது மக்கள் பிடித்து விசாரணை செய்த பின் மேல் விசாரணைகளுக்காக புலிகளிடம் கொடுப்பதற்காக வைத்திருந்தனர்.

இவ்வாறு வைத்திருந்த திருடர்களில் ஒருவரிடம் கடையொன்றில் களவாடப்பட்டதாக கருதப்படும் ரொக்கப்பணம் (300/-) முந்நூறு ரூபாவையும் பொதுமக்கள் இத்திருடனிடம் இருந்து மீட்டெடுத்துள்ளனர் எனவும் செய்திகள் மூலம் தெரியவந்துள்ளது. (14)

### இந்தியா....

(1ஆம் பக்கத்தொடர்ச்சி)

பற்படை கிழக்குப்பிராந்தியத் தளபதி கொமடோர் பர்னான்டோவுக்கு கேடயம் ஒன்றை அன்பளிப்பாக வழங்கினார். நடுவில் இலட்சுமியின் இலட்சினை பொறிக்கப்பட்டிருந்தது வட்டமான வடிவமைப்புள்ள இக் கேடயத்தின் கரைகளில் பூவேலைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

## வவுனியா வடக்கு பகுதிக்கு நீர் வழங்குவதில் குறைபாடு

(வவுனியா)

வவுனியா வடக்குப் பகுதிக்கான நீர் விநியோகம் திருப்தியாக நடைபெறுவதில்லை எனப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த நான்கு வருடகாலமாக நீர் விநியோகக் குறைபாடுகள் பற்றி நீர் விநியோக வடிகாலமைப்புப் பகுதிக்கும் கடிதமூலம்தெரியப்படுத்தியும் எது வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. குழாய்கள் பல இடங்களில் வெடிப்புக் கண்டுள்ளன. இதனால் சுயநலப் பாவனையாளர்கள் லாபம் அடைகின்றனர்.

பாவனையாளர்கட்கு நீர் போதியளவு கிடைக்கவில்லை. என வவுனியா வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு கோட்ட மீளளிப்பு கண்காணிப்புக்குழு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்த விநியோகத் திட்டத்தை ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்திடம் கொடுக்க உத்தேசிக்கப்பட்டது. வேலைப்பளு காரணமாக இது ஏற்கப்படவில்லை. இத்திட்டத்தை விரைவில் பூர்த்தி செய்ய வேண்டுமென்றும் இதற்கு வேறு நிதி மூலங்கள் பெறுவதற்கும வட்ட புனர்வாழ்வு புனரமைப்புக் குழுவினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் ஒரு தீர்மானப் கோட்ட மீளமைப்பு கண்காணிப்புக் குழுவால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

நெடுங்கேணி கோட்ட முகாமையாளர் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது. ஆனால் வவுனியா நகர நீர் வழங்கல் பகுதி பிரதிநிதிகள் எவரும் இதில் சமூகமளிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

### தமது குடும்பம்...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

மான பெண்கள் தம் கற்பைப் பறிகொடுத்துள்ளனர்.

புரட்சி என்பது வாய்ச் சொல்லில் ஏற்படுவதில்லை, செயலினால் ஏற்படுவது. இந்த விதத்தில் அன்னையின் தியாகத்தை நாம் அனைவரும் மதித்து அவரின் தியாகத்தை உலகிற்கு வெளிப்படுத்த வேண்டும்.

ஐந்து குழந்தைகளை வளர்க்க வேண்டிய பொறுப்பிலிருந்து விலகி, எமது இயக்கத்திற்கு வேளியாய இருந்து இந்த மாபெரும் தியாகத்தை அன்னை செய்துள்ளார். இந்த விதத்தில் மில்லர். திலீபனின் தியாகத்தைவிட அன்னையின் தியாகம் பெரியது.

இவர் மரணித்தபின் மக்கள் புரட்சி வெடிக்கும் என்பதை அறிந்து இந்திய அரசு ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தியது. ஊரடங்கு நேரத்திலும் அன்னையின் மரணச் சடங்கில் 15.000க்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். இது மக்களின் தேசப்பற்றை உலகிற்கு உணர்த்திவிட்டது,

மாணவி ஜெயகுமாரி செல்வராசா, சமாதான நீதவான் திரு. பொன்னம்பலம் ஆகியோரும் பேசினர்.

மகளிர் மகாவித்தியாலய கொத்தணி அதிபர் எம். படுத்தீன் தலைமையில் இவ் விழா நடைபெற்றது. பாடசாலை வளவில் அன்னையின் நினைவாக சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது. (தி)

### அடகு நகைகளுக்கு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தங்கள் நகைகளை மீட்டுத் தொழில் செய்யவோ, தொழில், விவசாயத்தில் முதலீடு செய்யவோ வாய்ப்பளிக்கும் விதத்தில் வட்டியிலிருந்து விலக்களிக்க வேண்டும் என்றும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி, அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறது.

வங்கிகள் இப்பொழுது கைத்தொழில், விவசாயத்துக்குக் கடன் வசதிகள் செய்து கொடுக்கின்றன. இந்தக் கடனைப் பெற்றுக் கொள்வதற்கும் நகைகளை அடகு வைத்தவர்களுக்கு வாய்ப்பில்லை. அடகு வைத்த நகைகளை மீட்டால்தான் வங்கிக் கடனைப் பெற்றுக்கொள்ள முடியுமென்பதும் குறிப்பிடத்தக்கது.

### அந்நிய படை.....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பி வடக்குகிழக்கில்குழப்பங்களை ஏற்படுத்தியது என்றும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

தொடர்ந்து பேசிய அவர் இந்தியப்படை வருகையால் ஜே.வி. பியின்நடவடிக்கைக்கு உட்பட்டு அப்பாவி மக்கள் செயற்பட்டனர். பலர் கொல்லப்பட்டனர்.

இந்தியப்படையுடனான போராட்டத்தில் சுமார் ஆயிரத்து ஐநூறு ஜவான்களும் ஏழாயிரம் இலங்கை மக்களும் பலியாகியுள்ளனர்.

கலந்துரையாடல், புரிந்துணர்வு, சகோதரத்துவம், கலந்தாலோசனை ஆகியவற்றின் மூலமே பிரச்சனைகளைத் தீர்க்க முடியும் எனவும் அவர் சொன்னார்.

### யா. வைத்தியசாலை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலட்சக்கணக்கான ரூபாய் பெறுமதியுடைய இந்த மோட்டார்கள் பண்ணைக் கடற்கரைப் பகுதியிலுள்ள பம்புகளுக்கு மின் வழங்கப் பயன்படுத்தப்பட்டு வந்தது.

இந்திய இராணுவம் யாழ். நகரைவிட்டு வெளியேறும் அமளியின்போது சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த திருடர்கள் இதனைத் திருடியிருக்கலாம் என வைத்தியசாலை நிர்வாகம் தெரிவிக்கிறது.

வைத்தியசாலை கழிவுகளை உடனுக்குடன் வெளியேற்றுவதில் இந்த மோட்டார்கள் பெரும் பங்காற்றி வந்தது. இப்போது கழிவுகளை அகற்றுவதில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது.

இத் திருட்டுப்பற்றி சம்பந்தப்பட்டவர்களிடம் முறையிடப்பட்டுள்ளது. அவர்களும் மிகவிரைவில் இவற்றை கைப்பற்றித் தருவதாக உறுதி அளித்துள்ளனர் என்றும் வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

அதேவேளை இவ்விரண்டு மோட்டர்களையும் யாரிடமாவது திருடர்கள் விற்றிருந்தால் அவற்றை பெருமனதுடன் வைத்தியசாலை நிர்வாகத்தில் ஒப்படைக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுவதாக நிர்வாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (லோ)

...வர்கள் சென்றமை குறிப்பிடத்தக்கது.

### மாகாண அமைச்சுகளுக்கு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கது. இம்மகாநாட்டில் அரசாங்கத் தரப்பில் உயர் கல்வி அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீட் வடக்கு-கிழக்கு மாகாணசபை ஆளுநர் நளின் செனிவரெட்னா, பாதுகாப்புச் செயலாளர், ஐ ஜி பி, ஆகியோரும் விடுதலைப் புலிகள் அமைப்பின் சார்பில் அன்ரன் பாலசிங்கம், யோகி, திருமதி அன்ர பாலசிங்கம், கிழக்கு மாகாண விடுதலைப்புலிகள் அரசியற் பொறுப்பாளர் பூபனும் இராணுவப் பொறுப்பாளர் பதுமனும் கலந்து கொண்டார்கள்.

பிறெட்டறிக் கோட்டைக் கச்சேரியில் வேலை செய்யும் ஊழியர் தொடர்பான கேள்விக்குப் பதிலளிக்கையில், பொதுவாக வேலைகள் நடைபெறுகின்றன. ஆனால் கச்சேரியில் வேலை செய்யும் அரசாங்க ஊழியர் அங்கு அகதிகள் இருப்பதினால் வேலைக்குச் செல்ல மறுத்தார்கள். அவர்களுக்குப் போதிய பாதுகாப்பு வழங்குவதாக நான் உறுதியளித்துள்ளேன். அவர்கள் எதிர்வரும் திங்கள் முதல் (இன்று) வேலைக்குத் திரும்ப இணக்கம் தெரிவித்துள்ளார்கள். இரண்டரை வருடங்களாக அகதிகள் பிறெட்டறிக் கோட்டையில் வாழ்கிறார்கள். புனர்வாழ்வுக்காக அவர்களுக்கு வழங்கப்பட்ட காசையும் செலவு செய்துள்ளார்கள். எதற்கும் மூன்று மாதங்கள் காலக்கெடு கொடுத்துள்ளேன். அதற்கிடையில் ஏதாவது ஒழுங்குகள் செய்யவேண்டும் என்றார்.

### புனர்வாழ்வு நிதி வந்து சேரும்

யாழ்ப்பாணத்தில் ஒரு திணைக்கள உயர் அதிகாரி மாகாண சபை கலைந்ததால் புனர்வாழ்வுக்கும், புனரமைப்புக்கும் தமக்கு ஒதுக்கிய நிதி வந்துசேரவில்லை என்கிறார் என்றபோது, மாகாண சபை கலைந்ததற்கும், பணக்கொடுப்பனவுகளுக்கும் தொடர்புகுறைவென்றும், கொழும்பில் இருந்து பணம் அனுப்பப்பட்டால் அது பகிர்ந்தளிக்கப்படும் என்றார். இதுகூட ரூபா 70 லட்சம் வந்திருக்கிறது. அதை நாம் உடனடியாகப் பகிர்ந்தளிக்க யோசிக்கிறோம் என்றார். திருக்கோணமலையில் பழுதடைந்த பஸ்களுக்கு உதிரிப் பாகங்கள் வாங்குவதற்கு முதற் கட்டப் பணமாக ரூபா 3 லட்சம் வருகிறது. தேவையான மிகுதிப் பணமும் விரைவில் வரும் என்றார்.

முன்னாள் முதலமைச்சர் பெருமாளை உங்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். அவர் தொடர்பான உங்கள் மதிப்பீடு என்ன? அவர் நல்ல மனிதர். கெட்டித்தனமானவர். யாரோ தூண்டி விட்டதால், அவர் கட்சியின் முடிவுப்படி தன்னிச்சையாகச் சுதந்திர ஈழம் பிரகடனப்படுத்தியிருக்க வேண்டும் என்றார்.

விடுதலைப் புலிகளுக்கும், உங்களுக்குமிடையிலான உறவுகள் எப்படி உள்ளன என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர்கள் சிவில் நிர்வாகத்தை அமுல் படுத்த உதவி செய்கிறார்கள். அவர்கள் உதவி விரும்பத்தக்கது என்றும் விடுதலைப்புலிகளின் திருக்கோணமலைப் பிராந்திய அரசியல் பொறுப்பாளர் ரூபன் சிவில் நிர்வாகத்தைச் சீரமைப்பதற்கு எமக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகிறார் என்றார்.

மாகாண அரசின் நிர்வாகத்தைப் பற்றிக் கேட்டபோது, அக்கேள்விக்கு நேரடியாகப் பதிலளிக்க விரும்பாத ஆளுநர் அவர்கள் சில நியமனங்களை மேலதிகமாக வழங்கி உள்ளார்களென்றும், உதாரணமாக மாகாண அரசின் களஞ்சியத்தில் தேவைக்கதிகமான ஊழியர்களை நியமித்துள்ளார்கள் என்றார்.

### வட-கிழக்கு.......

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரங்களைப் பாவித்து, அதிகாரிகளைப் பதவி நீக்குதல், நியமித்தல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி கட்டளை பிறப்பித்துள்ளார்.


## தேவை

புதிய நவீன சைனீஸ் ரெஸ்டோரன்ட்றிற்கு பின்வரும் வேலையாட்கள் உடனடியாகத் தேவை.

1. சமையலாளர்கள் (முன் அனுபவம் விரும்பத்தக்கது)
2. சமையல் உதவியாளர்கள் (பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.)
3. பரிமாறுபவர்கள்.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். உணவு, தங்குமிட வசதிகள் கொடுக்கப்படும். 28 ஆம் திகதி காலை ஒன்பது மணிக்கு ஈழநாதம் அலுவலகத்தில் நேரடியாக சமுகமளிக்கவும்.

ஈழநாதம்
31, வைமன் றோட்
யாழ்ப்பாணம்.

B/415



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப் பெற்றது